بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 8

இதழ் 32

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரி 1445 - முஹர்ரம் 22★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1402 - ஸஹூர் 10 ★10 ஆகஸ்ட் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

وَلَوۡ تَرٰۤی اِذۡ وُقِفُوۡا عَلَی النَّارِ فَقَالُوۡا یٰلَیۡتَنَا نُرَدُّ وَلَا نُکَذِّبَ بِاٰیٰتِ رَبِّنَا وَنَکُوۡنَ مِنَ الۡمُؤۡمِنِیۡنَ ﴿۲۸﴾

**பொருள் :**

நரகத்திற்கு முன் அவர்கள் நிறுத்தப்படும்போது நீர் அவர்களைக் கண்டால் அவர்கள் அந்தோ! நாங்கள் மீண்டும் உலகிற்கு அனுப்பப்பட்டால் நலமாக இருக்குமே. (அவ்வாறாயின்) நாங்கள் ஒருபோதும் எங்கள் இறைவனின் அடையாளங்களைப் பொய்யாக்க மாட்டோம். மேலும் நாங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்போம் என்று கூறுவார்கள். (அன்ஆம் : 28)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவ மிக்க பரிசுத்த ஆற்றல்

### அன்னாரால் தயார் செய்யப்பட்ட கூட்டத்தினரைக் கண்டால் அவர்கள் எப்போதும் இறைவனுக்காக இருந்ததும் அவர்களது செயல் வாழ்க்கையில் அவர்களுக்கு நிகர் எவரும் இல்லை என்பதும் தெரிய வருகின்றது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நமது இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றல் இந்த அந்தஸ்தை அடைந்துள்ளது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அனைத்து நபிமார்களையும் ஒப்பிட்டு பார்த்தால் மற்ற நபிமார்களில் எவரும் ஒன்றுமே செய்யவில்லை என்பது தெரிய வரும். யூதர்கள் உலகின் நாய்கள் ஆவர். கிறித்தவர்களைப் பார்த்தால் அவர்கள் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் ஊற்றிலிருந்து மிக தொலைவில் சென்று கிடக்கின்றனர். ஒருவர் ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களை வணங்குகின்றார். மற்றொருவர் ஈஸா மஸீஹை இறைவனாக கருதுகின்றார். மேலும் உலகை வணங்குவதே இரவும், பகலும் அவர்களின் பணியாக உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் தயார் செய்யப்பட்ட கூட்டத்தினரைக் கண்டால் அவர்கள் எப்போதும் இறைவனுக்காக இருந்ததும், தங்களது செயல் வாழ்க்கையில் அவர்களுக்கு நிகர் எவரும் இல்லை என்பதும் தென்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய மற்றும் வெற்றிகரமான வாழ்க்கையின் சித்திரம் இதுவாகும். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பணிக்காக வந்தார்கள். மேலும் அதனை முழுமை செய்தவாறு இந்த உலகிலிருந்து சென்றுவிட்டார்கள். உதாரணமாக, பாதுகாப்பு ஏற்பாட்டாளர்கள் முழுமையான ஆவணங்களை ஐந்து வருடங்களில் ஒழுங்குப்படுத்தி இறுதியில் அறிக்கை கொடுக்கின்றனர். பின்னர் சென்று விடுகின்றனர். அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலும் தென்படுகின்றது. قُمۡ فَاَنۡذِرۡ (எழுந்து நில்)என்ற குரல் வந்த அந்த நாள் முதல் اَلۡیَوۡمَ اَکۡمَلۡتُ لَکُمۡ دِیۡنَکُمۡ என்ற நாள் வரை எடுத்துப் பாருங்கள்!

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தன்னிகரற்ற வெற்றியைக் குறித்து தெரிய வரும். இந்த வசனங்களிலிருந்து இது தெளிவாக தெரிய வருகின்றது. அதாவது, அன்னார் (ஸல்) இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்ட சிறப்பானவராக இருந்தார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு தமது

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்...

## அபூலஹப் மனைவியின் கதை வெறும் கட்டுக்கதைகளாகும். முழு உலகிற்கும் அஞ்சாத இறைவனின் அந்தத் தூதர் (ஸல்) ஒரு பலவீனமான பெண்ணிடம் அல்லாஹ்வை மறைக்க நேரிடும் அளவிற்கு அச்சமடைவது எவ்வாறு சாத்தியம் ஆகும்!

وَاِذَا قَرَاۡتَ الۡقُرۡاٰنَ جَعَلۡنَا بَیۡنَکَ وَبَیۡنَ الَّذِیۡنَ لَا یُؤۡمِنُوۡنَ بِالۡاٰخِرَۃِ حِجَابًا مَّسۡتُوۡرًا ﴿۴۶﴾ (17:46)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேற்கண்ட வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்திற்கு இரண்டு பொருள்கள் உள்ளன. (1) நீர் திருக்குர்ஆனை ஓதும்போது நாம் உமக்கும், மறுமை நாளின் மீது நம்பிக்கை கொள்ளாத அந்த மக்களுக்கு இடையிலும் எப்படிப்பட்ட திரையிட்டு விடுகின்றோம் என்றால், அந்தத் திரையும் கூட மறைந்திருக்கின்றது. அதாவது அந்தத் திரையும் அவர்களின் பார்வையிலிருந்து மறைந்திருக்கின்றது. புரிதல் இல்லாத ஒருவர் ஹிஜாப் என்ற சொல்லிலிருந்து வெளிப்படையான திரை என்று புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக இறைவன் இதனை கூறியுள்ளான்.

சில மக்கள் திரை என்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைந்து வந்த அந்தத் திரை ஆகும் என்று பொருள் கொண்டுள்ளனர். மேலும், அபூலஹபின் மனைவி தொடர்பான இந்தக் கதையை அவர்கள் எழுதியுள்ளனர். அதாவது, சூரா அல்லஹப் இறங்கியபோது, فِیۡ جِیۡدِہَا حَبۡلٌ مِّنۡ مَّسَدٍ என்பதை செவியுற்று அவள் கோபத்தால் நிறைந்து விட்டாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை துன்புறுத்தும் எண்ணத்துடன் அணைத்துக் கொண்டாள். இறைவா! நீ என்னை இவளுடைய தீங்கிலிருந்து காப்பாற்றுவாயாக! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்...

## நபிமொழி

**உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர் ஆவார். ஒவ்வொருவரிடமும் அவரது பொறுப்புகள் குறித்து விசாரிக்கப்படும்**

(2409) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்: உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர் ஆவார். மேலும் அவரிடம் அவரது பொறுப்பு குறித்து விசாரிக்கப்படும். அரசர் ஆட்சியாளர் ஆவார். எனவே அவரிடம் அவரது குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படும். ஒவ்வொரு நபரும் தமது குடும்பத்தின் ஆட்சியாளர் ஆவார். எனவே அவரிடமும் அவரது (குடும்ப) பொறுப்பு குறித்து கேட்கப்படும். மேலும் பெண்ணும் தனது கணவரின் வீட்டில் ஆட்சியாளர் ஆவார். எனவே அவரிடமும் அவரது பொறுப்புக் குறித்து கேட்கப்படும். மேலும் ஊழியர் தனது எஜமானரின் செல்வத்தின் பாதுகாப்பிற்கு பொறுப்பாளர் ஆவார். எனவே அவரிடமும் அது தொடர்பாக (கேள்வி) கேட்கப்படும்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து இந்த மக்களின் குறிப்பைக் குறித்து செவியுற்றேன். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாகவும் நான் புரிகின்றேன். அதாவது மனிதன் தனது தந்தையின் செல்வத்திற்கும் பொறுப்பாளி ஆவான். மேலும் அவனிடம் அவரது செல்வம் தொடர்பாகவும் கேட்கப்படும். எனவே உங்களில் ஒவ்வொருவரும் ஆட்சியாளர் ஆவார். மேலும் அவரிடம் அவரது (ஆளுமையின் கீழ் இருக்கும்) நபர்கள் குறித்து விசாரிக்கப்படும். (ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் இஸ்திக்ராஸ், பதிப்பு காதியான்- 2008ம் ஆண்டு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போருக்காக மக்கத்து காஃபிர்கள் செய்த தயாரிப்புகளைக் குறித்த கூடுதல் விளக்கமும் மதீனாவிலிருந்து இஸ்லாமியப் படையின் புறப்பாடும்**

**இறைவா! எங்கள் இரு பிரிவுகளில் எந்தப் பிரிவு உண்மையில் நிலைத்திருக்கிறதோ, உனது பார்வையில் அதிகம் ஒழுக்கமுடையதாகவும், சிறந்ததாகவும் எது உள்ளதோ அதற்கு உதவி புரிவாயாக! மற்ற பிரிவை இழிவடையச் செய்வாயாக! என்று மக்காவிலிருந்து புறப்படுவதற்கு முன் கஅபத்துல்லாஹ்வில் சென்று குறைஷிகள் துஆ செய்தனர்**

**துவக்கத்தில் மக்கத்து படையினரின் எண்ணிக்கை ஆயிரத்து முந்நூறாக இருந்தது. ஆனால் பனூ ஸுஃரா மற்றும் பனூ அதீ கோத்திரத்தின் மக்கள் வழியில் அந்தப் படையிலிருந்து விலகி விட்டனர். இவ்வாறு குறைஷிய படையின் எண்ணிக்கை 950 அல்லது ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஓராயிரமாக இருந்தது**

**பெரும்பாலான அறிவிப்புகளில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 313 என்று கூறப்பட்டுள்ளது**

**அல்லாஹ்வே! இவர்கள் வெறும் காலோடு இருக்கின்றார்கள். இவர்களுக்குப் பயண விலங்குகளை வழங்குவாயாக! இவர்கள் ஆடையற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு ஆடை வழங்குவாயாக! இவர்கள் பசித்தவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு வயிறார உணவு வழங்குவாயாக! இவர்கள் மிகவும் நெருக்கடியில் இருக்கிறார்கள். உனது அருளால் இவர்களைத் தேவையற்றவர்களாக ஆக்கி விடுவாயாக! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபிகளுக்காக துஆ செய்தார்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 16 ஜுன் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **16 ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

மக்கத்து காஃபிர்கள் போருக்காக செய்த ஆயத்தங்களின் சில நிலைகள் எடுத்துரைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக மேற்கொண்டு இவ்வாறு விளக்கம் வருகின்றது: உமய்யா பின் கலஃப் என்ற ஒருவன். இன்னொருவன் அபூலஹப் என்பவன் ஆவான். இந்த ஆயத்தம் செய்யப்பட்டு கொண்டிருந்தபோது இவர்கள் போருக்கு செல்வதில் சிறிது தயக்கம் காட்டினார்கள். இதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இந்தப் போருக்காக குறைஷிய தலைவர்கள் எல்லாரையும் அழைத்துச் செல்ல வேண்டுமென எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால், உமய்யா பின் கலஃப் போருக்கு செல்வதிலிருந்து தவிர்த்துக் கொண்டிருந்தான். மக்காவின் ஒரு தலைவன் உக்பா பின் அபீ முஈத் உமய்யாவிடம் வந்தான். அவனிடம் நறுமணம் தரும் வாசனை திரவியத்தை வைத்து விட்டு அபூ அலாவே! நீ பெண்கள் பூசிக் கொள்ளும் இந்த வாசனை திரவியத்தை எடுத்துக் கொள். ஏனென்றால், நீயும் பெண்களைச் சேர்ந்தவன் ஆவாய். உனக்கு போரில் என்ன வேலை இருக்கிறது? என்று கூறினான்.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், பாகம் 4, பக்கம் 22, தாருல் குதுபில் இல்மியா- பெய்ரூத், 1993)

பிறிதோர் அறிவிப்புக்கு ஏற்ப அபூஜஹ்ல் உமய்யாவிடம் வந்தான். அவனிடம், நீ மக்காவின் தலைவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரியவர்களில் ஒருவன் ஆவாய். நீ போரிலிருந்து பின்வாங்குவதை மக்கள் பார்த்துவிட்டால் அவர்களும் பின்தங்கி விடுவார்கள். எனவே எங்களோடு கண்டிப்பாக புறப்படு. வேண்டுமானால், ஓரிரு நாள் பயண தொலைவு வரை செல். அதற்குப் பிறகு திரும்பி வந்து கொள் என்று கூறினான்.

உண்மையில் உமய்யா போருக்கு செல்வதற்கு அஞ்சியதன் காரணம் என்னவென்றால், அவன் கொல்லப்படுவது பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்து வைத்திருந்தார்கள். அது பற்றி அவனுக்குத் தெரிந்திருந்தது. புகாரியில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் இருந்து இவ்வாறு அறிவிப்பு வருகின்றது:

ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்கள் உம்ரா செய்யும் எண்ணத்தில் சென்றார்கள். அவர்கள் உமய்யா பின் கல்ஃப் இடம் தங்கினார்கள். அவர்களின் பழைய பழக்கம் இருந்தது. உமய்யா சிரியா பக்கம் செல்லும் பொழுது மதீனாவைக் கடந்து செல்லும்போது ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களின் வீட்டில் தங்குவது வழக்கம்.

உமய்யா ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களிடம், இப்போது காத்திரு! என்று கூறினான். அன்னார் உம்ரா செய்ய விரும்பியிருந்தார்கள். (ஆனால்) இப்பொழுது காத்திரு. மதிய நேரம் ஆன பிறகு மக்கள் கவனமற்று இருக்கையில் சென்று வலம் வந்து கொள் என்று அவன் கூறினான். முஸ்லிம்களுக்கு இருந்த எதிர்ப்பு காரணமாக இந்த முன்னெச்சரிக்கை செய்யப்பட்டது. ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் வலம் வந்து கொண்டிருக்கும் போது மதிய வேளையாக இருந்தது; அன்னார் வலம் வர ஆரம்பித்தார்கள். வலம் வந்து கொண்டிருந்தபோது அபூஜஹ்லைப் பார்த்தார்கள். இது யார் கஅபாவை வலம் வருவது ? என்று கேட்டான். நான்தான் என்று ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு, அபூஜஹ்ல் நீ நிம்மதியாக கஅபா ஆலயத்தை வலம் வந்து விடுவாயா? நீயோ முஹம்மது(ஸல்) அவர்கள்) மற்றும் அவருடைய தோழர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளாய் என்று கூறினான். ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் ஆம்! என்று கூறினார்கள்.

அப்பொழுது அவர்கள் இருவரும் ஒருவர் மற்றவரைப் பழித்துக் கூறினார்கள். அதாவது, அன்னாருக்கு அபூஜஹ்ல் சவால் விடுத்தான். நீ எவ்வாறு வலம் வர முடியும்? நீயோ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவர்களைச் சேர்ந்தவன் ஆவாய் என்று அவன் கூறினான். அதற்கு ஆம்!. நான் அடைக்கலமும் கொடுத்திருக்கின்றேன். வலம் வரவும் செய்வேன் என்று அன்னார் கூறினார்கள். ஒருவர் மற்றவரைப் பழித்துக் கூற ஆரம்பித்தனர்.

உமய்யா ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களிடம், ஸஃதே! அபுல்ஹகமுக்கு எதிராகக் குரலை உயர்த்தாதே! - இது அபூஜஹ்ல் உடைய புனைப் பெயர் ஆகும். ஏனெனில், அவன் இந்த ஊரின் தலைவன் ஆவான் என்று கூறினான். அதற்கு, இறைவன் மீது ஆணையாக! நீ என்னை பைத்துல்லாஹ்வை வலம் வருவதிலிருந்து தடுத்தால் நான் இதை விட அதிகம் கடுமையான தடையை உருவாக்கி விடுவேன். அது என்னவென்றால், மதீனாவைக் கடந்து செல்லும் உங்களுடைய வியாபார வழியை அதாவது சிரியாவின் வியாபார வழியை நான் அடைத்து விடுவேன் என்று ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: உமய்யா ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களிடம், உனது குரலை உயர்த்தாதே! என்றே கூறி வந்தான். அவர்களைத் தடுத்து வந்துான். ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களுக்குக் கோபம் வந்து விட்டது. உமய்யாவிடம் நீ விலகி இரு.

அவனுக்கு உதவியாக, ஆதரவாக நிற்காதே!

அதாவது, அபூஜஹ்லுக்கு ஆதரவாக நிற்காதே! என்று கூறினார்கள்.

நான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உன்னைக் கொல்லப் போவதாக கூறி வந்தார்கள் என்று கூறினார்கள். அதாவது நீ கொல்லப்படுவது பற்றி முன்னறிவிப்பு செய்துள்ளார்கள் என்று அவனிடம் கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் அந்த மக்கள் அதாவது, முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்கள் உன்னைக் கொல்லப் போகிறார்கள் என்று வந்துள்ளது. என்னையா? என்று உமய்யாக் கேட்டான். அதற்கு ஆம்! உன்னைத்தான் என்று ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் கூறினார்கள். பிறகு, மக்காவில் வைத்தா? என்று உமய்யா கேட்டான். அதற்கு ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள், அது எனக்குத் தெரியாது என்று கூறினார்கள். இதைக் கேட்ட உமய்யா இறைவன் மீது ஆணையாக! முஹம்மது ((ஸல்) அவர்கள்) ஒரு விஷயத்தைக் கூறினார்கள் என்றால் பொய்யாகக் கூறமாட்டார்கள் என்று அவன் கூறினான். பிறகு அவன் தன் மனைவியிடம் திரும்பிச் சென்று யஸ்ரபைச் சேர்ந்த என் சகோதரர் என்ன கூறினார் என்று உனக்குத் தெரியுமா? என்று கேட்டான். என்ன? என்று அவள் கேட்டாள். அதற்கு அவர் கூறுகிறார்: முஹம்மது (ஸல்) அவர்கள்) என்னைக் கொல்லப் போவதாக கூறுவதைக் கேட்டுள்ளாராம் என்று உமய்யா கூறினான்.

அதற்கு, அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்கள் பொய் பேசுவதில்லை என்று அவன் மனைவி கூறினாள்.

ஆக, இந்த முன்னறிவிப்பால்தான் உமய்யா அச்சம் அடைந்திருந்தான். முஸ்லிம்களுக்கு எதிராக போர் புரிய செல்ல விரும்பவில்லை. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்:

அன்னார் பத்ர் களத்தை நோக்கி புறப்பட்டபோது, உதவி கேட்பதற்காக பறைசாற்றுபவன் வந்தபோது உமய்யாவின் மனைவி அவனிடம், யஸ்ரபை சேர்ந்த உங்களுடைய சகோதரர் கூறிய அந்த விஷயம் உங்களுக்கு நினைவில்லையா? என்று கேட்டாள். அப்போது அவன் புறப்பட வேண்டாம் என்று நினைத்தான். ஆனால், அபூஜஹ்ல் அவனிடம், நீ இந்த ஊரின் தலைவர்களில் ஒருவன் ஆவாய். ஓரிரு நாளுக்காவது எங்களோடு செல் என்று கூறினான். எனவே, அவன் இரண்டு நாள்களுக்காக அவர்களுடன் சென்றான். அல்லாஹ் அவனைக் கொல்ல வைத்து விட்டான். (ஸஹீஹ் அல்புகாரி - கிதாபுல் மனாகிப், பாப் இலாமத்துன் நுபுவ்வத் ஃபில் இஸ்லாம், ஹதீஸ் 3632)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனைக் கொல்வார்கள் என்று கூறியிருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோ அவனைக் கொல்லவில்லை என்று சில வரலாற்று ஆசிரியர்கள் இந்த ஒரு கருத்தையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். ஆக, விளக்கமளிப்பவர்கள் கூறுகின்றார்கள்:

இதற்குப் பொருள், அன்னார் (ஸல்) அவன் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருப்பார்கள் என்பதாக இருந்தது. ஏனென்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோ உமய்யா பின் கலஃப் உடைய சகோதரன் உபை பின் கலஃப் தவிர வேறு யாரையும் கொல்லவில்லை. அவனை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹது போரில் கொன்றார்கள்.

விளக்கம் அளிப்பவர்கள் பிறகு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் உமய்யாவிடம், முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்கள் உன்னைக் கொல்வார்கள் என்று கூறியிருக்கலாம். ஏனெனில் கூறப்பட்டது போன்று அறிவிப்பில் அன்னார் அல்லது அன்னாருடைய தோழர்கள் கொல்வார்கள் என்றும் வருகின்றது. எவ்வாறு இருப்பினும், அவன் கொல்லப்பட்டான். யார் கொன்றது? என்ற விவாதம் தேவையற்றது. இது முன்னறிவிப்பாக இருந்தது. அது நிறைவேறிவிட்டது.

இதேபோன்று, அபூலஹபும் போருக்கு செல்ல பயந்து கொண்டிருந்தான். அவன் தனது இடத்தில் இன்னொரு மனிதனை அனுப்பியிருந்தான். தான் போருக்கு செல்லவில்லை. அவன் போருக்கு செல்லாமல் இருந்ததற்கான காரணம், ஆத்திக்கா பின் அப்தில் முத்தலிஃப் உடைய கனவாக இருந்தது.

ஆத்திகா, கண்ட கனவு கையிலிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொண்டது போன்றதாகும் என்று கூறி வந்தான். அதாவது, உறுதியான விஷயமாகும். (ஸபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், பாகம் 4, பக்கம் 21, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் - 1993)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கம் எழுதியுள்ளார்கள்:

இரண்டு பேர் மட்டுமே இந்தப் போர்த் திட்டத்தில் கலந்து கொள்ளத் தயங்கினார்கள். அது அபூலஹப் மற்றும் உமய்யா பின் கல்ஃப் ஆகியோர் ஆவர். ஆனால், அவர்கள் தயங்கியதற்குக் காரணம் முஸ்லிம்கள் மீது அனுதாபம் கொண்டிருந்தார்கள் என்பதல்ல. மாறாக, அபூலஹபோ தன் சகோதரி ஆத்திக்கா பின்த் முத்தலிப் உடைய கனவால் பயந்து வந்தான்.

அதை அவர் ஸம்ஸம் (ஒற்றன்) வருவதற்கு வெறும் மூன்று நாள்களுக்கு முன், குறைஷியர்களின் அழிவு தொடர்பாகக் கண்டிருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவன் கொல்லப்படுவது தொடர்பாக செய்திருந்த முன்னறிவிப்பின் காரணமாக உமய்யா பின் கல்ஃப் அஞ்சியிருந்தான். அதைப் பற்றி அவனுக்கு ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்கள் மூலமாக மக்காவில் தெரிய வந்திருந்தது.

ஆனால், பிரபலமான இந்த இரண்டு தலைவர்கள் பின் தங்கி இருப்பதனால் பொதுமக்களான நிராகரிப்பாளர்கள் மீது பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருந்தது. எனவே மற்ற குறைஷிய தலைவர்கள் உத்வேகத்தையும், தன்மானத்தையும் ஊட்டி கடைசியில் இந்த இருவரையும் சம்மதிக்க வைத்து விட்டார்கள். அதாவது, இந்த இருவரையும், சம்மதிக்க வைத்து விட்டார்கள். அதாவது, உமய்யாவோ தானே தயாராகி விட்டான். ஆனால், அபூலஹப் இன்னொருவனுக்கு போதுமான அளவு பணம் கொடுத்து தனது இடத்தில் நிறுத்தி விட்டான்.

இவ்வாறு மூன்று நாட்கள் ஆயத்தத்திற்குப் பிறகு ஆயிரம் பேருக்கு மேற்பட்ட துணிச்சலான போர் வீரர்களின் படை மக்காவில் இருந்து புறப்பட்ட தயாரானது. இன்னும் படை மக்காவில் தான் இருந்தது. அப்போது சில குறைஷிய தலைவர்களுக்கு, பனூ கனானாவின் கிளைக் கோத்திரமான பனூ பக்ர் கோத்திரத்தோடு மக்கா வாசிகளின் தொடர்புகள் சீர்கெட்டு உள்ளன. இவர்கள் இல்லாதபோது பலன் பெற்று அவர்கள் இவர்களுக்குப் பின்னால் மக்காவின் மீது தாக்குதல் ஏதும் தொடுத்து விடப் போகிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டது.

இந்த எண்ணத்தின் காரணமாக சில குறைஷியர்கள் சிறிது ஆட்டம் காண ஆரம்பித்தார்கள். ஆனால், அப்போது மக்காவில் இருந்த பனூ கனானாவின் ஒரு தலைவன் ஸுராக்கா பின் மாலிக் பின் ஜஃஸம் என்பவன் அவர்களிடம், மக்காவின் மீது எந்தத் தாக்குதலும் தொடுக்கப்படாது என்பதற்கு நான் உத்திரவாதம் அளிக்கின்றேன் என்று கூறி ஆறுதல் அளித்தான்.

இன்னும் சொல்வதாயின் ஸுராக்காவுக்கு முஸ்லிம்களை எதிர்ப்பதற்கு எந்த அளவு உத்வேகம் இருந்தது என்றால், குறைஷியர்களுக்கு உதவியாக அவன் தானும் பத்ர் மைதானம் வரை உடன் சென்றான். ஆனால், அங்கு முஸ்லிம்களைப் பார்த்து அவனிடம் எப்படிப்பட்ட ஒரு மதிப்பச்சம் ஏற்பட்டது என்றால் போருக்கு முன்னாலேயே தன் கூட்டாளிகளை விட்டு விட்டு ஓடிவிட்டான்.

மக்காவில் இருந்து புறப்படும் முன் குறைஷியர்கள் கஅபாவில் சென்று இவ்வாறு துஆ செய்தார்கள்:

இறைவா! எங்கள் இரு பிரிவுகளில் எந்தப் பிரிவு உண்மையில் நிலைத்திருக்கிறதோ, உனது பார்வையில் அதிகம் ஒழுக்கமுடையதாகவும், சிறந்ததாகவும் எது உள்ளதோ அதற்கு உதவி புரிவாயாக! மற்ற பிரிவை இழிவடையச் செய்வாயாக!

இதற்குப் பிறகு காஃபிர்களின் படை மிகவும் கம்பீரத்துடனும் ஆரவாரத்துடனும் மக்காவில் இருந்து புறப்பட்டது. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 350 -351)

தங்களது அழிவிற்காக இவர்கள் தாங்களே துஆ செய்து கொண்டார்கள்.

ஆரம்பத்தில் மக்கத்து படையின் எண்ணிக்கை 1300 ஆக இருந்தது. (அர்ரஹீகுல் மக்தூம், பக்கம் 281, மக்தபத்துஸ் ஸலஃபியா, லாஹூர்-2000ம் ஆண்டு)

இந்த சான்று நமக்கு கிடைக்கின்றது. ஆனால், பனூ ஸுஹ்ரா மற்றும் பனூ அத்தீ மக்கள் வழியில் இந்தப் படையை விட்டுப் பிரிந்து விட்டார்கள். இவ்வாறு குறைஷிகளின் படையின் எண்ணிக்கை 950 அல்லது ஓர் அறிவிப்புக்கு ஏற்ப 1000 ஆக இருந்ததாக சான்று கிடைக்கின்றது.

இதற்குப் பிறகு, அவர்களிடம் 100 அல்லது சிலரது பார்வையில் 200 குதிரைகள், 700 ஒட்டகங்கள், 600 கவசங்கள் மற்றும் இதர போர் தளவாடங்களுடம் இருந்தன. அதாவது ஈட்டி, வாள், வில், அம்பு போன்றவை போதுமான அளவு இருந்தன. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 352)

குறைஷிய தலைவர்களின் அழிவு தொடர்பாக ஜைஹம் பின் ஸலத் உடைய ஒரு கனவைப் பற்றிய குறிப்பு கிடைக்கின்றது.

குறைஷிகள் மக்காவிலிருந்து புறப்பட்டார்கள். ஜுஹ்ஃபா என்ற இடத்தில் தங்கினார்கள். ஜுஹ்ஃபா என்பது மக்காவில் இருந்து மதீனா பக்கம் ஏறத்தாழ 82 மைல் தொலைவில் அமைந்துள்ளது. ஆக, ஜைஹம் பின் ஸலத் மக்களிடம் கூறினான்: நான் இவ்வாறு கனவு பார்த்தேன். ஒரு நபர் குதிரையில் பயணித்து வருகிறார். அவருடன் ஓர் ஒட்டகமும் இருக்கின்றது. அவர் கூறுகிறார்: உத்பா பின் ரபீஆ கொல்லப்பட்டான். ஷேபா பின் ரபீஆ கொல்லப்பட்டான். அபுல்ஹகம் பின் ஹிஷ்ஷாம் அதாவது அபூஜஹ்ல் கொல்லப்பட்டான். உமய்யா பின் கலஃப் கொல்லப்பட்டான். இன்ன இன்ன நபர்கள் (கொல்லப்பட்டனர்). பிறகு பத்ர்ப் போரில் குறைஷிய தலைவர்களில் கொல்லப்பட்ட அனைவரின் பெயரையும் எடுத்தான் - பிறகு, வந்த அந்த நபர் தம் ஒட்டகத்தின் கழுத்தில் ஈட்டியால் குத்தி, நமது படையின் பக்கம் விட்டுவிட்டார். ஆக, நமது படையில் எந்த ஒரு கூடாரத்திலும் அந்த ஒட்டகத்தின் ரத்தம் படாமல் இருக்கவில்லை.

அபூஜஹ்ல் இந்தக் கனவைக் கேட்டபோது, ஏளனத்தோடும் கோபத்தோடும், இதோ! பனூ முத்தலிப் கோத்திரத்திலிருந்து இன்னொரு நபி பிறந்து விட்டார். நாளை நாங்கள் போர் செய்தால் யார் கொல்லப்படுகிறார்? என்று நன்றாகத் தெரிந்து விடும் என்று கூறினான். (அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 422 -423, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் -2001-ம் ஆண்டு)

எவ்வாறு இருப்பினும், ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று அபூஸுஃப்யானோ வழியை மாற்றிச் சென்று விட்டார். அவர் அபூஜஹ்லுக்கு, போர் செய்ய வேண்டிய தேவை இல்லை. திரும்பி வந்து விடுங்கள் என்று செய்தி அனுப்பினார். சென்ற முறையும் ஏற்கனவே கூறப்பட்டிருந்தது. அதாவது, அபூ ஸுஃப்யான் சுயமே முன்னெச்சரிக்கையாக வியாபாரக் குழுவிலிருந்து முன்னால் சென்று தண்ணீர் இருக்கும் இடத்தில் இறங்கினார். அங்கு ஒருவனிடம் நீ யாராவது வந்து செல்வதைப் பார்த்தாயா? என்று கேட்டார். அதற்கு அவர், நான் வழக்கத்திற்கு மாற்றமான நபர் யாரையும் பார்க்கவில்லை. ஆனால், நான் இரண்டு சவாரி வீரர்களைப் பார்த்தேன். அவர்கள் தங்களுடைய ஒட்டகங்களை அதோ அந்த குளத்திற்கு அருகில் அமர வைத்து தண்ணீர்ப் பைகளில் தண்ணீர் நிரப்பி விட்டுச் சென்று விட்டார்கள் என்றான்.

அபூ ஸுஃப்யான் அவர்கள் ஒட்டகம் அமர வைத்த இடத்திற்குச் சென்றார். அவர்களுடைய ஒட்டகங்களின் புழுக்கைகளை எடுத்து உடைத்தார். அப்போது அதில் பேரீத்தம் பழ கொட்டைகள் இருந்தன. இதை பார்த்து விட்டு அவர் இறைவன் மீது ஆணையாக! இதுவோ யஸ்ரபின் (மதீனாவின்) தீவனம் ஆகும் என்று கூறினார். பிறகு, அவர் வேகமாகத் தன்னுடைய தோழர்களை நோக்கி ஓடினார். தம்முடைய ஒட்டகங்களின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து அவற்றின் வழியை மாற்றி விட்டார். மேலும், கடற்கரையோரமாகப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். பத்ர் மைதானத்தைத் தன் வலப்புறம் விட்டு விட்டு வேகமாக புறப்பட்டுச் சென்றார். (அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 422,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் -2001-ம் ஆண்டு)

கடந்த குத்பாவில், நான் இந்த விஷயத்தைக் கூறிவிட்டேன். எவ்வாறு இருப்பினும், அபூஸுஃப்யானுக்கு அவர் தனது வியாபாரக் குழுவை பாதுகாத்து விட்டார் என்ற உறுதி ஏற்பட்டு விட்ட பிறகு, அவர் குறைஷியர்களுக்கு நீங்கள் உங்களுடைய வியாபாரக் குழுவையும் மக்களையும் பொருளையும் காப்பாற்றுவதற்காகத் தான் புறப்பட்டீர்கள்; ஆக, அல்லாஹ் அதைக் காப்பாற்றி விட்டான். எனவே நீங்கள் திரும்பி வந்து விடுங்கள் என்று செய்தி அனுப்பினார். ஆனால், அபூஸுஃப்யானின் செய்தியைக் கேட்டு அபூஜஹ்ல், இறைவன் மீது ஆணையாக! நாங்கள் ஒருபோதும் திரும்பிச் செல்ல மாட்டோம். எதுவரை என்றால், பத்ர் மைதானத்தைச் சென்றடைவோம் என்று கூறினான்.

பத்ர் மைதானம் அரேபியர்களின் திருவிழாக்களில் ஒரு திருவிழாவிற்கான இடமாகவும் இருந்தது. அங்கு அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சந்தைகள் போடப்பட்டு வந்தன. அவன் கூறினான்:

நாம் அங்கு மூன்று நாள்கள் தங்குவோம்; ஒட்டகங்களை அறுப்போம்; உணவு பரிமாறுவோம்; மது அருந்தச் செய்வோம்; எங்களுடைய அடிமைப் பெண்கள் நமக்கு முன்னால் பாடல்களைப் பாடுவார்கள்.

முழு அரேபியாவும் நம்மைப் பற்றியும், நமது பயணத்தைப் பற்றியும் நமது படையைப் பற்றியும் கேள்விப்படும். பிறகு அவர்கள் எப்பொழுதும் நமக்கு அஞ்சி கொண்டே இருப்பார்கள். எனவே முன்னோக்கிச் செல்லுங்கள். (அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 423, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் -2001-ம் ஆண்டு)

ஒரு மதிப்பச்சத்தை ஏற்படுத்துவதற்காக நாம் போர்ப் படைகளை அழைத்துக் கொண்டு அங்கு சென்றே ஆக வேண்டும் என்று அவன் கூறினான். அவர்களோடு பனூ ஸுஹ்ரா கோத்திரமும் இருந்தது. அது தொடர்பாக, அது திரும்பி வர முடிவெடுத்ததாக எழுதப்பட்டுள்ளது.

அபூஸுஃப்யானின் செய்தி கிடைத்தபோது இதை கேட்டு பனூ ஸுஹ்ரா கோத்திரத்தின் நண்பன் அக்னஸ் பின் ஷரீக் கூறினான்: பனூ ஸுஹ்ரா கோத்திரத்தினரே! அல்லாஹ் உங்களுடைய செல்வங்களையும் காப்பாற்றி விட்டான். உங்களுடைய கூட்டாளி மக்ஸமா பின் நவ்ஃபலையும் காப்பாற்றி விட்டான். இவன் அபூ ஸுஃப்யானின் வியாபாரக் குழுவில் இருந்தான். நீங்கள் மக்ஸமாவைக் காப்பாற்றுவதற்காகவும், உங்களுடைய செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் வீட்டிலிருந்து புறப்பட்டீர்கள்.

நீங்கள் என்னைக் கோழை என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளுங்கள் - அதாவது போரை விட்டு செல்கின்றனர். இவர் கோழை என்றுதானே மக்கள் கூறுவார்கள். அவன் கூறுகின்றான்: நீங்கள் என் மீது கோழை என்ற பழியை வேண்டுமானாலும் சுமத்திக் கொள்ளுங்கள். ஆனால், திரும்பிச் செல்லுங்கள். ஏனெனில், இழப்பு ஏற்படாத சூழலில் நீங்கள் புறப்பட வேண்டிய எந்த அவசியமும் இல்லை. அபூஜஹ்லின் பேச்சைக் கேட்காதீர்கள்.

ஆக, அவர்கள் திரும்பிச் சென்று விட்டார்கள். பனூ ஸுஹ்ரா கோத்திரத்தின் ஒருவர் கூட போரில் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறே பனூ அத்தீ பின் கஅப் கோத்திரத்தில் இருந்தும் ஒரு மனிதன் கூட போருக்கு செல்லவில்லை. திரும்பிச் சென்று விட்டார்கள்.

குறைஷிய படை முன்னோக்கிச் சென்று கொண்டே இருந்தது. ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களின் மகன் தாலிபும் இந்தப் படையில் கலந்து கொண்டிருந்தார். குறைஷிகளின் சில மக்களோடு அவர் உரையாடினார்.

குறைஷிகள் அவரைப் பார்த்து கிண்டலாக இறைவன் மீது ஆணையாக! ஹாஷிம் கோத்திரத்தைச் சேர்ந்தவரே! நீர் எங்களோடு புறப்பட்டுள்ளீர்தான் என்றாலும், உமது உள்ளத்து அனுதாபங்கள் முஹம்மது (ஸல்) அவர்களோடு இருக்கின்றன என்று கூறினார்கள். இந்த விஷயத்தைக் கேட்டு தாலிப் தன் நண்பர்களுடன் மக்காவுக்குத் திரும்பி வந்து விட்டார்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பு கிடைக்கிறது: தாலிப் பின் அபீ தாலிப் வலுக்கட்டாயமாக இணை வைப்பாளர்களுடன் பத்ர் களத்திற்குச் சென்றார். ஆனால், அவர் கைதிகளிலும் கிடைக்கவில்லை. கொலையுண்டவர்களிலும் கிடைக்கவில்லை. தனது வீட்டிற்கும் திரும்பவில்லை. (தாரிகே தபரீ, மொழியாக்கம், தொகுதி 2,பக்கம் 137, நஃபீஸ் அகடமி, காராச்சி) இது தபரீயின் சான்றாகும்.

எவ்வாறு இருப்பினும், 1300 லிருந்து குறைந்து ஆயிரம் போர் வீரர்கள் இருந்து விட்ட மீதமிருந்த படை தனது பயணத்தைத் தொடர்ந்தது. எதுவரை என்றால், அவர்கள் பத்ர் மைதானத்துக்கு அருகில் இருக்கக் கூடிய ஒரு குன்றுக்குப் பின்னால் சென்று முகாம் அமைத்துக் கொண்டார்கள். (அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம்-423, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் -2001-ம் ஆண்டு)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்து புறப்படுதல் மற்றும் முஸ்லிம்களின் படையின் எண்ணிக்கை தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ரமலான் மாதம் 12 ஆம் தேதி ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு சனிக்கிழமை அன்று மதீனாவில் இருந்து புறப்பட்டார்கள். அன்னாருடன் 300 க்கும் சற்று அதிகமான மக்கள் இருந்தார்கள். அவர்களில் 74 பேர் முஹாஜிர்களும் மற்றவர்கள் அன்ஸார் ஸஹாபிகளாகவும் இருந்தார்கள். இது அன்ஸார் ஸஹாபிகளும் கலந்து கொண்ட முதல் போர்ப் படையாகும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களை மதீனாவிலேயே இருக்குமாறு கட்டளையிட்டார்கள். ஏனெனில், அவர்களின் மனைவியும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகளும் ஆன ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்கள் நோயுற்றிருந்தார்கள்.

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தாமே நோயுற்றிருந்ததாக வருகிறது. ஆனால், அவர்களின் கண்ணியத்திற்குரிய துணைவியார் நோய் வாய்ப்பட்டிருந்தார்கள் என்பதுதான் அதிக பிரசித்தி பெற்ற அறிவிப்பு ஆகும். அதிகப்படியான அறிவிப்புகளில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 313 என்று கூறப்பட்டுள்ளது. ஸஹீஹ் புகாரியில் வருகிறது. ஹஸ்ரத் பரா பின் ஆஸிஃப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

தாலூத் நபியுடன் நதியைக் கடந்து

சென்ற தோழர்கள் எத்தனை பேர் இருந்தார்களோ அத்தனை பேர் நாங்களும் இருந்தோம் என்று பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டிருந்த ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தோழர்கள் என்னிடம் கூறினார்கள். அதாவது, 310-க்கும் சற்று அதிகம்.

ஹஸ்ரத் பரா (ரலி) கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஆணையாக! தாலுத் நபியுடன் நம்பிக்கை கொண்டவர்கள் மட்டுமே நதியைக் கடக்கச் செய்யப்பட்டார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது:

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக்களுக்கு எண்ணுவதற்கு கட்டளையிட்டார்கள். எண்ணி கணக்கெடுத்த பிறகு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் 313 பேர் உள்ளோம் என்று அவர்கள் தெரிவித்தபோது அன்னார் (ஸல்) மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும், தாலுத்தின் தோழர்கள் எத்தனை பேர் இருந்தார்களோ அத்தனை பேர்தான் என்று கூறினார்கள். (ஸூபுல் ஹூதா வர் ரஷ்ஷாத், பாகம் 4, பக்கம்25, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பத்ர் யுத்தத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கையைப் பற்றி கூறுகின்றார்கள்: பத்ர்ப் போர் சந்தர்ப்பத்தில் 313 ஸஹாபிகள் புறப்பட்டனர் என்பதை நாம் பார்க்கின்றோம். ஒருவேளை அவர்கள் 313 பேருக்குப் பதிலாக 600 அல்லது 700 பேர் புறப்பட்டிருந்தார்கள் என்றால் மதீனாவில் தங்கியிருந்த அந்த ஸஹாபிகளும் உடன் சென்றிருப்பார்கள். போர், அவர்களுக்கு இன்னும் எளிமையாக ஆகியிருக்கும். ஆனால், அல்லாஹ் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கோ இந்தப் போரைப் பற்றி கூறிவிட்டான். ஆயினும், அத்துடன் போர் பற்றி யாரிடமும் கூறக்கூடாது என்று தடுத்தும் விட்டான்.

அதற்குக் காரணம் என்னவென்றால், அல்லாஹ் முந்தைய சில முன்னறிவிப்புகளை நிறைவேற்ற விரும்பியிருந்தான். உதாரணமாக, ஸஹாபிகளின் எண்ணிக்கை 313 ஆக இருந்தது.

பைபிளில் ஜத்தூன் அவர்களுடன் நடந்த சம்பவம் முஹம்மது (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் தோழர்களோடும் நடக்கும் என்று முன்னறிவிப்பு இருந்தது. ஜத்தூன் நபி தம்முடைய எதிரிகளோடு சண்டையிட்ட போது அவர்களின் கூட்டத்தின் எண்ணிக்கை 313 ஆக இருந்தது.

நாம் போருக்காக மதீனாவில் இருந்து புறப்படுகிறோம் என்பது ஸஹாபிகளுக்குத் தெரிந்து இருந்தால் அவர்கள் அனைவருமே புறப்பட்டு இருப்பார்கள். அவர்களின் எண்ணிக்கை 313 ஐ விட அதிகமாக ஆகி இருக்கும். இந்த நுட்பத்தின் அடிப்படையிலேயே ஸஹாபிகளின் எண்ணிக்கை 313-ஐ விட அதிகமாக ஆகக் கூடாது என்பதற்காக அல்லாஹ் இந்த விஷயத்தை மறைவாக வைத்திருந்தான்.

ஏனெனில், 313 ஸஹாபிகள் செல்வதே முன்னறிவிப்பை நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. எனவே, போர் செய்தி மறைத்து வைக்கப்படுவது அவசியமாக இருந்தது. மேலும், போர்க் களத்தை சென்றடைந்த பிறகு நீங்கள் குறைஷிய படையை எதிர்கொள்ள போகிறீர்கள் என்று ஸஹாபிகளிடம் கூறப்பட்டது. (அன்வாருல் உலூம், தொகுதி 18, பக்கம் 619)

உம்மே வரக்கா பின்த் நவ்ஃபல் என்ற ஒரு பெண்மணி இருந்தார்கள். போருக்கான அவர்களின் உத்வேகம் பற்றி குறிப்பு வருகிறது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்த களத்தை நோக்கி புறப்படலானபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கும் போருக்கு செல்ல அனுமதி வழங்குங்கள். நான் தங்களோடு இருந்து நோய்வாய்ப்பட்டவர்களைப் பராமரிப்பேன்; அல்லாஹ் எனக்கும் உயிர்த் தியாகத்திற்கான நல்வாய்ப்பு வழங்கலாம் என்று ஹஸ்ரத் உம்மே வரக்கா (ரலி) அன்னாரிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், நீர் உமது வீட்டிலேயே இருப்பீராக! அல்லாஹ் உமக்கு ஷஹாதத்தை வழங்குவான் என்று கூறினார்கள். இந்த ஸஹாபியா திருக்குர்ஆன் ஓதி இருந்தார்கள். .ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களுக்கு ஷஹீதா என்று பெயர் வைத்து விட்டார்கள். முஸ்லிம் பொது மக்களும் இவர்களை ஷஹீதா என்றே அழைத்து வந்தார்கள்.

பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஹஸ்ரத் உம்மே வரக்கா அவர்களின் ஓர் அடிமையும் அடிமைப் பெண்ணும் இவர்களை ஒரு போர்வையில் சுருட்டி மயக்கம் அடைய செய்து விட்டார்கள். அதனால் அவர்கள் மரணித்தே போனார்கள். இவர்கள் அந்த அடிமை மற்றும் அடிமைப் பெண் தொடர்பாக எனது மரணத்திற்குப் பிறகு விடுதலை ஆகி விடுவார்கள் என்று உயில் எழுதி வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளையின் பேரில் அன்னாரை கொலை செய்தவர்களுக்கு மரணத் தண்டனை அளிக்கப்பட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உண்மையைக் கூறினார்கள்: என்னோடு வாருங்கள். ஷஹீதாவை சந்தித்து வருவோம் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுவார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா,தொகுதி 2, பக்கம் 197 -தாருல் குதுபில்இல்மியா,பெய்ரூத்-2002-ம் ஆண்டு)

அவர்களின் வீட்டிற்குச் செல்லும் பொழுது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் போன்றோரையும் உடன் அழைத்துச் சென்று வந்தார்கள்.

இஸ்லாமியப் படையின் ஆற்றலின் விவரம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, இந்தப் போரில் முஸ்லிம்களிடம் ஐந்து குதிரைகள் இருந்தன. சிலரது பார்வையில் இரண்டு குதிரைகள் மட்டுமே இருந்தன. ஒன்று ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்களின் குதிரை. மற்றொன்று ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களின் குதிரை.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பத்ர் நாளன்று ஹஸ்ரத் மிக்தாத் அவர்களைத் தவிர வேறு எந்த ஒரு குதிரை வீரரும் இருக்கவில்லை. ஆக, குதிரைகளின் எண்ணிக்கை அதிகபட்சமாக ஐந்து என்று அறிவிப்புகளில் கிடைக்கிறது. எவ்வாறு இருப்பினும், முஸ்லிம்களிடம் 60 கவசங்கள் இருந்தன. 70 அல்லது 80 ஒட்டகங்கள் இருந்தன. அவற்றில் அனைவரும் மாறி மாறி பயணித்து வந்தார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் முர்ஸத் பின் அபீ மர்ஸத் (ரலி) அவர்கள் ஆகியோர் ஓர் ஒட்டகத்தில் மாறி மாறி பயணித்து வந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நடந்து செல்லும் முறை வந்தபோது, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இரண்டு தோழர்களும் அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் நடக்கும் முறையில் நாங்கள் நடந்து செல்கிறோம். தாங்கள் பயணித்தே வாருங்கள் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், நீங்கள் என்னை விட ஆற்றல் மிக்கவர்களும் இல்லை. நானும் உங்களை விட வெகுமதி மற்றும் நற்கூலியின் தேவையற்றவனும் இல்லை. (அஸ்ஸீரத்துல் ஹல்பியா,தொகுதி 2,பக்கம்204-205,தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூத்-2002-ம் ஆண்டு)

எனக்கும் இந்தப் போருக்கான இந்தப் பயணத்திற்கான வெகுமதியும் நற்கூலியும் வேண்டும் என்று கூறினார்கள்.

கண்ணியத்திற்குரிய ஸஹாபிகளுக்காக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்த ஒரு துஆவும் இருக்கின்றது. அது இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: வழியில் ஓர் இடத்தைக் கடந்து செல்லும்போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் ஸஹாபிகளுக்காக இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! இவர்கள் வெறும் காலோடு இருக்கின்றார்கள். இவர்களுக்குப் பயண விலங்குகளை வழங்குவாயாக! இவர்கள் ஆடையற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு ஆடை வழங்குவாயாக! இவர்கள் பசித்தவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு வயிறார உணவு வழங்குவாயாக! இவர்கள் மிகவும் நெருக்கடியில் இருக்கிறார்கள். உனது அருளால் இவர்களைத் தேவையற்றவர்களாக ஆக்கி விடுவாயாக!

ஆக, இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. பத்ர் யுத்தத்தில் இருந்து திரும்பி வந்தவர்களில் எந்த ஒரு நபரும் பயண விலங்கில் செல்ல விரும்பியிருந்தால் அவர் பயன்படுவத்துவதற்காக ஒன்றிரண்டு ஒட்டகங்கள் அவருக்குக் கிடைக்காமல் இருக்கவில்லை. இதேபோன்று எவர்களிடம் ஆடை இருக்கவில்லையோ அவர்களுக்கு ஆடை கிடைத்து விட்டது. பயணப் பொருட்கள் எந்த அளவு கிடைத்தன என்றால், உண்ணுதல் பருகுதல் ஆகியவற்றில் எந்த நெருக்கடியும் இருக்கவில்லை. இதேபோன்று போர்க் கைதிகளை விடுவித்ததனால் எந்த அளவு ஈட்டுத் தொகை கிடைத்தது என்றால் ஒவ்வொரு குடும்பமும் வசதி படைத்ததாக ஆகிவிட்டது.(அஸ்ஸீரத்துல் ஹல்பியா,தொகுதி 2,பக்கம் 204-தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூத்-2002-ம் ஆண்டு)

சில மக்கள் மதீனாவிலேயே இருந்தார்கள். சில வயது குறைந்த போராளிகளுக்குத் திரும்பிச் செல்லுமாறு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் ( ஸல்) அவர்கள் கட்டளை பிறப்பித்திருந்தார்கள். இவை தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

பத்ர் போர்களத்தை நோக்கி புறப்படுமாறு செய்யப்பட்டிருந்த அறிவிப்பு பொது அறிவிப்பாகத்தான் இருந்தது: ஆயினும், அதில் அதிகம் ஆயத்தங்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. ஆக, அறிவிப்பில் வருகிறது:

சில மக்கள், எங்களுடைய பயண

விலங்குகள் மதீனாவில் இருந்து சற்று தொலைவில் இருக்கின்றன; நாங்கள் அவற்றை கொண்டு வரலாமா? என்று கேட்டுக் கொண்டபோது கூடாது! என்று வழிகாட்டல் வழங்கப்பட்டது. ஆக, ஒன்று இந்த மக்கள் அங்கேயே விடப்பட்டார்கள் அல்லது அவர்கள் பயண விலங்குகள் இன்றி உடன் புறப்பட்டார்கள்.

இது பொதுவானது என்று இங்கு எழுதப்பட்டுள்ளது. இது பொதுவானதாகத்தான் இருந்தது. ஆனால், பிறகும் கட்டுப்பாடுகள் இருந்தன. மக்கள் அதிகம் பேர் ஆயத்தமும் ஆக வேண்டாம் என்பதற்காக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் ( ஸல்) அவர்கள் எவருக்கும் ஆயத்தம் ஆக சந்தர்ப்பமும் வழங்கவில்லை.

எவ்வாறு இருப்பினும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: எப்படிப்பட்ட சில தூய மக்களும் இருந்தார்கள் என்றால், அவர்களுக்கு ஏதாவது ஒரு நியாயமான காரணத்தின் அடிப்படையில் அங்கேயே இருந்து விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. உதாரணமாக, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது.

இதேபோன்று அபூ அமாமா பின் ஸஃலபா (ரலி) அவர்களின் தாயார் நோயுற்றிருந்தார்கள். ஆனால், அவர்கள் உடன் செல்வதற்கான எண்ணம் கொண்டு விட்டிருந்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், நோய் வாய்ப்பட்டுள்ள உங்கள் தாயாருடன் இருங்கள் என்று கட்டளை பிறப்பித்தார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ர் போரில் இருந்து திரும்பி வந்தபோது, இவர்களின் தாயார் மரணித்து விட்டிருந்தார்கள். எனவே ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அன்னாரின் கபருக்குச் சென்று துஆ செய்தார்கள்.

மிகவும் உத்வேகத்தோடும் உணர்ச்சியோடும் மக்களைப் பயணத்திற்காக ஆயத்தம் செய்ய வைத்துக் கொண்டிருந்த ஹஸ்ரத் ஸஃது பின் உபாதா (ரலி) அவர்களைப் பாம்பு கடித்து விட்டது. எனவே, அவர்கள் மதீனாவிலேயே இருந்து விட்டார்கள்.

இதேபோன்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வழியில் ஓர் இடத்தில் நின்று குறைந்த வயதுடைய போராளிகளைத் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். அவர்களில் உமைர் பின் அபீ வக்காஸ் அவர்களும் ஒருவராக இருந்தார்கள். சிறுவர்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான கட்டளையை அவர்கள் கேட்டபோது, அழ ஆரம்பித்து விட்டார்கள்.

இதனால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களுக்குப் போரில் செல்ல அனுமதி வழங்கி விட்டார்கள். ஆக, அவர்கள் போரில் கலந்து கொண்டார்கள். உயிர்த் தியாகம் எனும் பானத்தையும் அருந்தினார்கள்.

எந்த குறைந்த வயதுடைய போராளிகளைத் திருப்பி அனுப்பப்பட்டனரோ அவர்களில் உஸாமா பின் ஸைது, ராஃபிஃ பின் கதீஜ் பரா பின் ஆஸிப், ஹஸீத் பின் ஸுஹைர், ஸைது பின் அர்க்கம் மற்றும் ஸைது பின் ஸாபித் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஆகியோரும் இருந்தார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா,தொகுதி 2, பக்கம் 227 - தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூத்- 2002-ம் ஆண்டு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இன்று எப்படிப்பட்ட காலம் வந்துள்ளது என்றால், மக்கள் இஸ்லாம் மற்றும் ஈமானுக்காக தியாகங்கள் செய்வதை விட்டும் தப்பிப்பதற்காக காரணங்களையும் சாக்குப் போக்குகளையும் தேடுகிறார்கள். நேரம் வரும்பொழுது எங்களுக்கு இன்ன கஷ்டம் இருக்கிறது; அந்தத் தடை இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

ஆனால், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஆன்மிக ஆற்றலின் கீழ் முஸ்லிம்களிடம் தியாக உணர்வு உருவாகி விட்டிருந்தது. ஆண்களும் பருவ வயதை அடைந்த பெண்களும் ஒருபுறம் இருக்கட்டும். பிள்ளைகளும் இந்த உணர்வால் நிரம்பி காணப்பட்டார்கள். எதுவரை என்றால், பத்ர் போரின் போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபாவை அவர்களில் போருக்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அழைத்தார்கள்.

அப்பொழுது ஒரு சிறுவன் பற்றி வருகிறது. மற்ற ஸஹாபிகளும் அந்தச் சிறுவன் சுயமே கூட இதைக் கூறுகிறார்: அந்த மக்கள் (வரிசையில்) நின்ற போது, இவரும் இஸ்லாத்திற்காக உயிரைத் தியாகம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்ற உத்வேகத்தில் அவர்களுடன் சென்று நின்று கொண்டார். ஆனால், அவருடைய உயரம் குறைவாக இருந்தது. மற்றவர்களோடு ஒப்பிடும்பொழுது சிறியவராகத் தென்பட்டார். எனவே அவர் தேர்ந்தெடுக்கப்படாமல் இருப்பதற்கான வாய்ப்பு இருந்தது.

எனவே அவர் தான் உயரமாகத் தெரிய வேண்டும் என்பதற்காக தன் கால் விரல்களால் நிற்க ஆரம்பித்து விட்டார். முன்னங்காலில் நின்று கொண்டார். குதிகால்களை உயர்த்திக் கொண்டார். மேலும், அவரை பலவீனமானவர் என்று நினைத்து விடக் கூடாது என்பதற்காக அவர் நெஞ்சை விரித்து வைத்துக் கொண்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், 15 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள் யாரையும் எடுக்கக் கூடாது என்று கூறினார்கள். அன்னார் தேர்ந்தெடுத்தவாறு இவரிடம் வந்தபோது இவர் சிறுவர் ஆவார். இவரை இங்கே நிற்க வைத்தது யார்? இவரை விலக்குங்கள் என்று கூறினார்கள்.

ஒருவேளை இன்று இவ்வாறு நிகழ்ந்தால் இப்படிப்பட்ட சிறுவன் நான் தப்பி விட்டேன் என்று மகிழ்ச்சியால் துள்ளி குதித்து இருப்பார். ஆனால், அந்தச் சிறுவன் விலக்கப்பட்டபோது அவர் எந்த அளவுக்கு அதிகமாக அழுதார் என்றால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அவர் மீது கருணை ஏற்பட்டது. அன்னார் சரி இவரை அழைத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள். (குத்பாதே மஹ்மூத், தொகுதி 17, பக்கம் 265)

இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவின் தலைவரை நியமித்தது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

மதீனாவில் இருந்து புறப்படும்போது அன்னார் தமக்குப் பின்னால் அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் (ரலி) அவர்களை மதீனாவின் தலைவராக நியமித்தார்கள். ஆனால், அன்னார் மதீனாவிலிருந்து 36 மைல் தொலைவில் உள்ள ரவ்ஹா என்ற இடத்தை அடைந்தபோது அநேகமாக, அப்துல்லாஹ் ஒரு பார்வையற்ற மனிதர் ஆவார்; குறைஷிய படை வருவதற்கான எதிர்பார்ப்பு இருக்கிறது; ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் மதீனாவின் ஏற்பாடு வலுவாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அன்னார் அபூலுபாபா பின் முன்ஸிர் (ரலி) அவர்களை மதீனாவின் தலைவராக நியமித்து திருப்பி அனுப்பி விட்டார்கள்.

அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் (ரலி) அவர்கள் தொடர்பாக அவர்கள் தொழுகைக்கான இமாமாக மட்டும் இருக்கட்டும் என்றும், நிர்வாகப் பணிகளை அபூலுபாபா அவர்கள் நிறைவேற்றட்டும் என்றும் கட்டளை பிறப்பித்தார்கள். மதீனாவின் மேற்புற பகுதி அதாவது, குபாவுக்கு தனியாக அன்னார் ஆஸிம் பின் அதீ (ரலி) அவர்களைத் தலைவராக நியமித்தார்கள்.(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ.(ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன்,பக்கம் 354)

இஸ்லாமியப் படையின் கொடிகளைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் படையின் கொடியை ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இது வெள்ளை நிறத்தில் இருந்தது. இது மட்டுமின்றி, இரண்டு கருப்பு நிறக் கொடிகளும் இருந்தன. அவற்றில் ஒன்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் இருந்தது. அதன் பெயர் உகாப் ஆகும். இந்தக் கொடி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மேலே போர்த்திக் கொள்ளும் ஆடையால் தயாரிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது கொடி அன்ஸாரி ஸஹாபி ஒருவரிடம் இருந்தது.

ஓர் அறிவிப்பிற்கு ஏற்ப, இஸ்லாமிய படையிடம் மூன்று கொடிகள் இருந்தன. முஹாஜிர்களின் கொடி ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களிடம் இருந்தது. கஸ்ரஜ் கோத்திரத்தின் கொடி ஹஸ்ரத் ஹப்பாப் பின் முன்ஸிர் அவர்களிடம் இருந்தது. அவ்ஸ் கோத்திரத்தின் கொடி ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்களிடம் இருந்தது. (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 203, தாருல் குதுபில் இல்மியா

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

பெய்ரூத்,2002-ம் ஆண்டு)

போரில் ஹஸ்ரத் கவாத் பின் ஜுபைர் (ரலி) அவர்களும் உடன் இருந்தார்கள். ஆனால், வழியில் ஓரிடத்தை அடைந்தபோது அவர்களது கால் கல்லில் இடித்துக் கொண்டதால் காயம் ஏற்பட்டு விட்டது. ரத்தம் வழிய ஆரம்பித்து விட்டது. அதனால் அவர்களால் நடக்க முடியவில்லை. எனவே, மதீனாவுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் இவர்களுக்காகவும் போர்ச் செல்வத்தில் பங்கு வைத்தார்கள். சில அறிஞர்களது பார்வையில் இவர்கள் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டிருந்தார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 203,தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்,2002-ம் ஆண்டு) ஆனால், திரும்பிச் சென்று விட்டார்கள் என்பதே சரியான அறிவிப்பு ஆகும்.

இணை வைப்பாளர்களின் உதவியைப் பெற மறுத்தது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

மதீனாவில் குபைப் பின் யஸாஃப் என்ற மிகவும் ஆற்றல் பெற்ற வீரர் ஒருவர் இருந்தார். இவர் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர் ஆக இருந்தார். பத்ர் யுத்தம் வரை இவர் முஸ்லிம் ஆகியிருக்கவில்லை. ஆனால், இவரும் தமது கஸ்ரஜ் கோத்திரத்துடன் போருக்காக புறப்பட்டார். போர் வெற்றி பெறும் சூழ்நிலையில் இவருக்குப் போர்ச் செல்வம் கிடைப்பதற்கான நம்பிக்கையும் இருந்தது. இவரும் தங்களோடு போரில் கலந்து கொள்கிறார் என்று முஸ்லிம்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் அவரிடம், எங்கள் மார்க்கத்தில் இருப்பவர் மட்டுமே எங்களுடன் போருக்கு செல்வார் என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் நீ திரும்பிச் சென்று விடு. நாங்கள் இணை வைப்பாளரின் உதவியைப் பெற விரும்பவில்லை என்று கூறினார்கள்.

குபைப் பின் யஸாஃப் மீண்டும் இரண்டாவது முறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் இரண்டாவது முறையும் அவரைத் திருப்பி அனுப்பி விட்டார்கள். கடைசியில், மூன்றாவது முறை அவர் வந்தபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், நீ அல்லாஹ் மற்றும் அவனது தூதர் மீது நம்பிக்கை கொள்கிறாயா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஆம்! என்றார். இதற்குப் பிறகு அவர் முஸ்லிம் ஆகிவிட்டார். மேலும், மிகவும் வீரத்துடன் போர் புரிந்தார். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம்-204, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் - 2002-ம் ஆண்டு)

இந்தப் பயணத்தின் போது ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் மான் வேட்டை ஆடியது தொடர்பாகவும் குறிப்பு கிடைக்கிறது. வழியில் ஓர் இடத்தை அடைந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களிடம், ஸஃதே! அதோ பாருங்கள்! மான் இருக்கிறது; அதன் மேல் அம்பு விடுங்கள் என்று கூறினார்கள்.

வழியில் அவர்களுக்கு மான் தென்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நின்று கொண்டு, தமது அருளுக்குரிய நாடியை ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களின் இரண்டு தோள்களுக்கும் இரண்டு காதுகளுக்கும் நடுவில் வைத்து அம்பு எய்வீராக! என்று கூறினார்கள். அல்லாஹ்வே! இவருடைய குறியை சரியாக்குவாயாக என்று துஆ செய்தார்கள்.

அவர்கள் அம்பு எய்த போது, அவர்களின் குறி மானை விட்டு தவறவில்லை. இதனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் புன்சிரித்தார்கள். ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் ஓடிச் சென்று அந்த மானைப் பிடித்த போது, அதில் உயிர் இருந்தது. எனவே அதை அறுத்து தூக்கிக் கொண்டு வந்தார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்களின் கட்டளையின்படி அது ஸஹாபிகளுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டது. (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 4, பக்கம் 25, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். ஸஃப்ரா என்ற இடத்தை அடைந்தார்கள். அது மிகவும் பசுமையான மற்றும் பேரீத்தம் மரங்கள் உள்ளடங்கிய ஓர் ஊராகும். அது பத்ர் களத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட பயண தூரத்தில் உள்ளது. அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் அபூ ஸுஃப்யானைக் குறித்து தகவல் சேகரித்து வருவதற்காக இரண்டு நபர்களை பத்ர் மைதானத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

தாமும் படையுடன் முன்னால் சென்று கொண்டிருந்தார்கள். எதுவரை என்றால் ஸஃப்ரான் என்ற பெயரை உடைய ஊரைக் கடந்தவாறு ஓர் இடத்தில் முகாமிட்டார்கள். அது ஸஃப்ரா என்ற ஊருக்கு அருகிலேயே இருக்கும் ஓர் ஊராகும். (அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம் பக்கம் 420, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2001-ம் ஆண்டு)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் அபூஸுஃப்யான் பற்றி தகவல் சேகரித்து வருவதற்காக அனுப்பியிருந்த இருவர் பயணித்தவாறு பத்ர் களத்தை அடைந்து விட்டார்கள். அங்கு தண்ணீருக்கு அருகில் ஒரு குன்றுக்குப் பக்கத்தில் ஒட்டகங்களை உட்கார வைத்துவிட்டு தண்ணீர்ப் பைகளை எடுத்து அவற்றில் தண்ணீர் நிரப்ப ஆரம்பித்தார்கள்.

அவர்கள் இருவரும் அங்கு பெண்களின் குரலைக் கேட்டார்கள். அவர்கள் ஒருவர் மற்றவரின் கையைப் பிடித்துக் கொண்டு தண்ணீர் பக்கம் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் நாளை அல்லது நாளை மறுநாள் வியாபாரக் குழு இங்கு வரும். அவர்களிடம் கூலி வேலை செய்து உனக்குத் தர வேண்டிய கடனை அடைத்து விடுவேன் என்று கூறிக் கொண்டிருந்தாள்.

இந்தப் பெண்கள் மட்டுமின்றி இன்னொரு நபரும் அங்கு இருந்தார். அந்த நபர், நீ உண்மையைக் கூறுகிறாய் என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்களால் அனுப்பப்பட்டிருந்த ஆட்கள் இந்த உரையாடல்களைக் கேட்டு விட்டார்கள். அவர்கள் இருவரும் தம்முடைய ஒட்டகங்கள் மீது பயணித்து திரும்பி வந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்களிடம் வந்து தாம் கேட்டதைத் தெரிவித்தார்கள். (அஸ்ஸீரத்தன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம் பக்கம் 422, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்,2001-ம் ஆண்டு)

இவ்வாறு படை வருகிறது என்று கூறினார்கள். ஆக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்களுக்கு இந்தத் தகவல் கிடைத்ததும் அன்னாரும் மேற்கொண்டு எச்சரிக்கை ஆகிவிட்டார்கள்.

மற்ற விவரங்கள் இனி எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

இப்பொழுது நான் சில மர்ஹூம்களைப் பற்றி கூற விரும்புகிறேன். ஒரு (நேரில் கொண்டு வரப்பட்டுள்ள) ஹாழிர் ஜனாஸா. அது யூ.கேவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஷேக் குலாம் ரஹ்மானீ ஸாஹிப் அவர்களுடையது. இவர்கள் கடந்த நாட்களில் 92-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியான அமிர்தசரஸைச் சேர்ந்த ஷேக் குலாம் ஜீலானீ ஸாஹிப் (ரலி) அவர்களின் மகன் ஆவார்கள். மேலும், இவர்கள் நீண்ட காலம் கராச்சியில் தொண்டாற்றுவதற்கு நல்வாய்ப்பு பெற்ற ஒருகாலம் வரை கராச்சி ஜமாஅத்தின் அமீராகவும் இருந்த ஷேக் ரஹ்மத்துல்லாஹ் ஸாஹிப் அவர்களின் மருமகன் ஆவார்கள்.

மதிப்பிற்குரிய ஷேக் குலாம் ரஹ்மானீ ஸாஹிப் அவர்களின் தந்தையார் 1902 ஆம் ஆண்டில் காதியான் பயணம் மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பார்ப்பதற்கு நற்பேறு பெற்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் கண்டார்கள். இந்த முகம் ஒரு பொய்யரின் முகமாக இருக்க முடியாது என்று கூறியவாறு உடனடியாக ஈமான் கொண்டார்கள். குலாம் ரஹ்மானீ ஸாஹிப் அவர்கள் 1958-ல் பிரிட்டனுக்கு வந்தார்கள்.

இங்கு வந்து எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் பட்டம் பெற்றார்கள். பிறகு, நீண்ட காலம் இங்கு மருத்துவ மனையில் ஒரு மெடிக்கல் ரிசர்ச் கவுன்சிலில் பணியாற்றினார்கள். பல ஆண்டுகள் வரை தேசிய பொதுச் செயலாளராகவும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஸவுத் ஹாலின் ஜமாஅத் தலைவராகவும் தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றார்கள்.

ஸவுத் ஹால் மிஷன் ஹவுஸுக்காக உள்ளூர் கவுன்சிலிடமிருந்து அனுமதி பெறுவதற்கு மிகவும் முயற்சி செய்தார்கள். அல்லாஹ் இவர்களின் முயற்சிகளுக்குப் பலனும் தந்தான். ஒரு வீட்டில் மிஷன்ஹவுஸ் நிறுவப்பட்ட போது, பக்கத்து வீட்டுக்காரர் உள்ளூர் நிர்வாகத்திடம் முறையீடு செய்து வந்தார். நிர்வாகம் சூழ்நிலையை அறிய ஆய்வு செய்தது. அதை மூட நினைத்தது. ஆனால், ரஹ்மானீ ஸாஹிப் அவர்கள் மிகவும் முயற்சி செய்து கடுமையாகப் போராடி தம்முடைய கொள்கையை நிர்வாகத்திற்கு முன்னால் எடுத்து வைத்தார்கள். அதன் விளைவாக அல்லாஹ்வின் அருளால் வெற்றி கிடைத்தது. ஜமாஅத்துக்கு சாதகமாக தீர்ப்பு சொல்லப்பட்டது.

ரஹ்மானீ ஸாஹிப் அவர்கள் ஆண்டாண்டு காலமாக ஸவுத் ஹால் மிஷன் ஹவுஸில் ஞாயிற்றுக் கிழமை வகுப்புகளை நடத்தி வந்தார்கள். மேலும், புதிய சந்ததிகளின் பல மக்களுக்கு இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் போதனையைத் தெரியப்படுத்தினார்கள். 2005-ல் நான்

வஸிய்யத் தொடர்பாக சந்தா கொடுப்பவர்களில் 50 சதவிகிதம் பேர் கண்டிப்பாக மூஸிகளாக இருக்க வேண்டும் என்ற திட்டத்தை அறிவித்திருந்தபோது இவர்கள் மிகவும் கடுமையாக உழைத்து இது சம்பந்தமாக முயற்சி செய்தார்கள். மக்களுக்கு எடுத்துக் கூறியும் வந்தார்கள். வஸிய்யத் துறையை கம்ப்யூட்டரில் பதிவு செய்ய வைத்தார்கள். இவர்கள் அதை நிர்வகித்தார்கள்.

மர்ஹூம் தொழுகை, நோன்பு மற்றும் திருக்குர்ஆன் திலாவத் ஆகியவற்றை முறையாக கடைபிடித்து வந்தார்கள். மகிழ்ச்சியாக உரையாடக் கூடியவர் மென்மையான இயல்புக்கு சொந்தக்காரர்,குறைவாக பேசுபவர், அன்பு நேசத்தோடு பழகக் கூடியவர், ஒரு நல்லியல்புள்ள அனுதாபம் காட்டக்கூடிய, தூய மனிதராக இருந்தார்கள்.

கிலாஃபத்துடனான பற்றுறுதியும் அளப்பெரிய தொடர்பும் இருந்தது. இவர்களுக்கு பைத்துல்லாஹ்வுக்கு ஹஜ் செல்வதற்கான நற்பேறும் கிடைத்தது. மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார் ஜமீலா ரஹ்மானீ மட்டுமின்றி, ஒரு மகன் காலித் ரஹ்மானீ மற்றும் மகள் ஆயிஷா ஆகியோர் உள்ளனர்.

இவர்கள் அல் இஸ்லாம் வெப்சைட்டின் சேர்மன் ஆன டாக்டர் ரஹ்மத்துல்லாஹ் ஸாஹிப் அவர்களின் சகோதரியின் கணவரும் ஆவார்கள். இயக்கத்தின் முரப்பி லயிக் தாஹிர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: ஒவ்வொரு மாதமும் ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கு வருவார்கள். மிகப் பெரும் தொகையை சந்தாவாக செலுத்தி ரசீது பெற்றுச் செல்வார்கள். அந்தக் காலத்தில் எனக்கு இவர்களுடன் இவ்வளவு அறிமுகம் தான் இருந்தது. ஆனால், அவர்களின் இயல்பில் இவர்களின் நன்மையின் தாக்கம் இருந்தது.

1990-ல் இங்கு சவுத் ஹாலில் இவர்கள் முரப்பியாக பணி நியமிக்கப்பட்ட போது இவர்களுடன் விரிவான அறிமுகம் ஏற்பட்டது. அவர்கள் கூறுகிறார்கள்: அந்த நாள்களில் சவுத் ஹாலின் ஜமாஅத் சத்ராக இருந்தார்கள். மிஷன் ஹவுஸைத் தமது வீட்டைப் போன்று கண்காணித்து வந்தார்கள். அதிகமான நேரம் மிஷன் ஹவுஸில் இருப்பார்கள். அதை சுத்தமாக, தூய்மையாக வைக்கும் பணியை செய்து வந்தார்கள்.

இவர்களின் காலத்திலேயே மிஷன் ஹவுஸின் விரிவாக்கமும் செய்யப்பட்டது. மிகவும் பணிவுள்ளவராக இருந்தார்கள். சிறியவர் பெரியவர் ஒவ்வொருவரோடும் அன்போடும், நேசத்தோடும் கண்ணியத்தோடும் பழகி வந்தார்கள். இயக்கத்தின் பணத்தைப் பாதுகாப்பார்கள். மிகவும் தன்னிகரற்ற மனிதராக இருந்தார்கள். இவர்களின் பண்புகளாகக் கூறப்பட்டவற்றை நானும் இவர்களிடம் கண்டிருக்கின்றேன்.

மிகவும் தன்னடக்கம் இருந்தது. கிலாஃபத்துடனான நன்றியுணர்வின் தொடர்பு மிகவும் உன்னதமாக இருந்தது. அதில் மிகவும் முன்னேறி இருந்தார்கள். இப்படிப்பட்ட மக்கள் குறைவாகவே இருக்கின்றனர். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக இவர்களின் பிள்ளைகளுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கும் மேற்கொள்வதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக.

இரண்டாவது காயிப் ஜனாஸா ஆகும்.

ரஹ்மானீ ஸாஹிப் அவர்களின் ஜனாஸாவோ கொண்டு வரப்பட்டுள்ளது. ஜூமுஆவுக்குப் பிறகு தொழ வைக்கப்படும். இன்ஷா அல்லாஹ். அத்துடன் சில காயிப் ஜனாஸாக்களும் உள்ளன.

காயிப் ஜனாஸாக்களில் முதலாவது ஜனாஸா தாஹிர் ஆஃகு முஹம்மது ஸாஹிப் அவர்களுடையது ஆகும். இவர்கள் ஃபுர்கினோஃபாஸோவின் டோரீ மண்டலத்தின் மஹ்தியாபாதைச் சேர்ந்தவர் ஆவார்கள். இவர்கள் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள். இவர்களுக்கு 44 வயது இருந்தது.

اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

மிஷனரீ இன்சார்ஜ் ஸாஹிப் எழுதுகிறார்கள்: இவர்களின் தந்தையார் 1999 இல் பைஅத் செய்வதற்கான நற்பேறு பெற்றார்கள். ஆனால், இவர்கள் பைஅத் செய்திருக்கவில்லை. பிறகு 19-வது வயதில் இவர்களுக்குக் காலில் பிரச்சனை ஏற்பட்டது. சிகிச்சைக்காக வாகா டோகோ சென்றார்கள். தமது நோயில் அதிகமாக இவ்வாறு துஆ செய்தார்கள்; அல்லாஹ்வே! எனக்கு நேர்வழி காட்டுவாயாக! அஹ்மதிய்யத் உண்மையானது என்றால், என்னை (அதன் பக்கம்) வழிநடத்துவாயாக!

மார்க்கம் தொடர்பாக கற்றுக் கொள்வதற்கு இவர்களுக்கு இளமைப் பருவத்தில் அதிக ஆர்வம் இருந்தது. அல்லாஹ்விடம் துஆவும் கேட்டார்கள்.

சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் பல்வேறு கனவுகளின் அடிப்படையில் இவர்களுக்குத் திருப்தி ஏற்பட்டு விட்டது. திரும்பி வந்து பைஅத் செய்து விட்டார்கள். பிறகு இவர்கள் ஜமாஅத்தின் தையல் மையத்திலிருந்தே தையல் பணியைக் கற்றுக் கொண்டார்கள். இதையே தம் வாழ்வைக் கழிப்பதற்கான வழியாகவும் ஆக்கிக் கொண்டார்கள்.

இந்தப் பெருநாளில் நோன்புப் பெருநாளில் புர்கினாஃபாஸோவின் ஷஹீதுகளின் குடும்பங்களுக்கு ஆடைகளைத் தைக்க வேண்டி இருந்தது. எந்தத் தையல் தொழிலாளியும் வேலையை எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. அங்கு முரப்பி ராாணா ஃபாரூக் ஸாஹிப் அவர்கள் இவர்களிடம் கேட்டபோது, இவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

கணவன் மனைவி இருவரும் இரவு பகலாக வேலை செய்து 20 பேருக்கான ஆடையை பெருநாளுக்கு முன்பு தைத்துக் கொடுத்தனுப்பி விட்டார்கள். முஹம்மது ஸாஹிப் அவர்களுக்குத் தப்லீஃக் செய்வதற்கும் அதிக ஆர்வம் இருந்தது. மிகவும் தெளிவாக உரையாடுவார்கள். குறைவாகவே எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருந்தார்கள். அல்லது முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாதவராக இருந்தார்கள். ஆனால், ஃபிரெஞ்சு மொழி மிக நன்றாகப் பேசி வந்தார்கள்.

கேன்ஸர் நோயின் காரணமாக இவர்களின் கால் முட்டிக்கு மேலே வெட்டப்பட்டு இருந்தது. சில நாளுக்கு முன் திடீரென்று மீண்டும் வலி எடுத்தது. கால் வெட்டப்பட்டிருந்த இடம் காய்ந்து போயிருந்தது. ஆனால், நாட்டின் நிலைமை மோசமாக இருப்பதால் எல்லா வழிகளும் அடைக்கப்பட்டிருந்தன. வாகா டாகோவில் உள்ள பெரிய மருத்துவ மனைக்கு செல்ல முடியாமல் இருந்தது. எனவே அங்கேயே உள்ளூர் மருத்துவ மனையில் இருந்தார்கள். சில நாள்கள் இருந்தார்கள். பிறகு அங்கேயே இவர்கள் மரணமடைந்து விட்டார்கள். இவர்கள் அஹ்மதி ஆன காலத்தில் இருந்து, இவர்களுக்கு தப்லீஃக் செய்வதற்கான பெரும் ஆர்வம் இருந்தது. எப்பொழுதும் ஏதாவது வழியை மேற்கொண்டு விடுவார்கள். ஸ்மார்ட் ஃபோன் வாங்கினார்கள். தம் இமாம் அல்ஹாஜ் இப்ராஹீம் பித்காஹ் ஸாஹிப் அவர்களிடம், அதில் தப்லீஃக் விஷயங்களைப் பதிவு செய்து மக்களுக்குத் தூதுச் செய்தியை அனுப்பி வாருங்கள் என்று கூறினார்கள்.

இவ்வாறு தப்லீஃக் செய்து வந்தார்கள். அதற்கான செலவையும் தாமே ஏற்று வந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் இவர்களின் இரண்டு மனைவிமார்கள் உள்ளனர். மகன்களும், மகள்களும் ஐந்து பேர் இருக்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கும் பொறுமையையும், மனதைரியத்தையும் வழங்குவானாக! இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! மர்ஹூம் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக!

அடுத்து காஜா தாவூத் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் ஜனாஸா பற்றிய குறிப்பு ஆகும். இவர்கள் மே 25 அன்று 80 வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

இவர்களின் ஒரு மகன் காஜா ஃபஹத் அஹ்மத் ஸாஹிப் கேரீபாஸில் இயக்கத்தின் முரப்பியாக இருக்கிறார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: எங்கள் குடும்பத்தில் அஹ்மதிய்யத் காஜா அஹ்மத் தீன் ஸாஹிப் அவர்களின் மகன், எங்கள் தந்தை வழிப்பாட்டனாரான காஜா அப்துல் லத்தீஃப் அவர்களின் மூலமாக வந்தது. பாட்டனார் அவர்கள் அவர்களின் தாய் வழிப்பாட்டனார் காஜா குலாம் முஹம்மத் ஸாஹிப் அவர்களின் வீட்டில் வளர்ந்தார்கள். அவர்கள் அல்லாஹ்வின் அருளினால் அஹ்மதியாக இருந்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: என் தந்தை வழிப்பாட்டனார் அவர்களின் பராமரிப்பில் 1917இல் கிட்டத்தட்ட 11 வயதில் ஜமாஅத்தில் பைஅத் செய்தார்கள். இவ்வாறு இவர்கள் தம் அனைத்து சகோதர சகோதரிகளில் தாம் மட்டுமே அஹ்மதியாக இருந்தார்கள்.

கனடாவில் நீண்ட காலம் வரை இவர்களுக்கு ஜமாஅத் தொண்டு ஆற்றுவதற்கும் நல்வாய்ப்பு கிடைத்தது. முதலில் பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் ஜமாஅத்தில் இவர்களுக்கு நீண்ட காலம் தொண்டாற்ற வாய்ப்பு கிடைத்திருந்தது. 1974 இல் இஸ்லாமாபாதின் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயிதாகவும் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் பாகிஸ்தான் தேசிய சட்டமன்றத்தில் வருகை தந்திருந்த சமயத்தில் இவர்களுக்கு தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது.

இது தொடர்பாக இவர்களைப் பற்றி ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தம் மனநிறைவையும் வெளிப்படுத்தினார்கள். இவர்கள் தொழில் அடிப்படையில் சிவில் இன்ஜினியராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் அளவற்ற அன்பும் பற்றுறுதியும் கொண்டிருந்தார்கள். ஜமாஅத் தொண்டுகளை மிகச் சிறந்த

முறையில் நிறைவேற்றுவதற்காக எந்நேரமும் முயற்சி செய்து வந்தார்கள்.

மரணத்தின்போது உள்ளூர் தொழுகை மையத்தில் இருந்தார்கள். ஜமாஅத்தின் செயற்குழு கூட்டத்தில் இருந்தார்கள். வீட்டுக்குப் புறப்படுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு சற்று நெஞ்சு வலியின் அறிகுறிகள் தென்பட்டன. சில நிமிடங்களில் தன் எஜமானரிடம் சென்று விட்டார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார் மட்டுமின்றி நான்கு மகன்களும் ஒரு மகளும் இருக்கிறார்கள்.

நான் கூறியது போன்று ஒரு மகன் வாழ்வை அர்பணித்தவர் ஆவார். கேரீபாஸில் முபல்லிஃக் ஆக உள்ளார்கள். அங்கு மாநாட்டின் பணி மும்முரங்கள் மற்றும் ஜமாஅத் பணி மும்முரங்கள் காரணமாக கனடாவிற்கு வர முடியவில்லை. தம் தந்தையின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அவர்களுக்கும் பொறுமையையும் மனதைரியத்தையும் வழங்குவானாக. மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு மதிப்பிற்குரிய ஸய்யித் தன்வீர் ஷாஹ் ஸாஹிப் அவர்களுடையது ஆகும். இவர்களும் கனடாவின் சிஸ்கா டவுனைச் சேர்ந்தவர் ஆவார்கள். இவர்கள் கடந்த நாட்களில் பேராகோயாவில் மரணமடைந்து விட்டார்கள். அங்கு இவர்கள் வக்ஃபே ஆர்ஸீ செய்தவதற்காக சென்றிருந்தார்கள்.

إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களுக்கும் ஒரே மகன் தான். ஸய்யித் ரஸா ஷாஹ் ஸாஹிப் அவர்கள். அவர்கள் இயக்கத்தின் முரப்பி ஆவார்கள். தன்வீர் ஷாஹ் ஸாஹிப் அவர்களின் தாயார் ஃபரக் கானம் ஸாஹிபா அவர்கள் பாகிஸ்தானில் இருந்து தம் சகோதரர் ஹாஜீ ஜுனூதுல்லாஹ் மற்றும் தம் தாயாருடன் பைஅத் செய்வதற்காக காதியானுக்கு வந்திருந்தார்கள்.

இவர்களின் மகன் எழுதுகிறார்கள்: என் பாட்டனார் ஸய்யித் பஷீர் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியான ஹஸ்ரத் ஸய்யித் அப்துஸ் ஸத்தார் ஷாஹ் அவர்களின் மகள் வழிப் பேரர் ஆவார்கள். இவ்வாறு இவர்களுக்கு ஹஸ்ரத் உம்மே தாஹிர் ஸாஹிபா அவர்களோடும் உறவுமுறை இருந்தது.

மர்ஹூம் ஜமாஅத்தின் மிகவும் நன்றியுணர்வுள்ள உறுப்பினராக இருந்தார்கள். தன்வீர் ஷாஹ் ஸாஹிப் எப்பொழுதும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு ஆயத்தமாக இருந்து வந்தார்கள். இவர்களின் மகன் எழுதுகின்றார்கள்: ஜமாஅத் நிகழ்ச்சிகளில் எங்களைக் கண்டிப்பாக அழைத்துச் செல்வார்கள். ஒவ்வொரு ஜுமுஆ அன்றும் முறையாக பள்ளிக் கூடத்தில் இருந்து விடுப்பு எடுக்க வைத்து, ஜுமுஆவில் அழைத்துச் சென்று வந்தார்கள். பொருட்தியாகங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் அளித்து வந்தார்கள்.

எப்பொழுதும் சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை அதற்காக எடுத்து வைத்து விடுவார்கள். வீட்டு மக்கள் மற்றும் ஜமாஅத்தாரிடமும் அவ்வாறு செய்யுமாறு கூறிவந்தார்கள். எவ்வாறு நாம் ஜமாஅத்தில் நல்லமுறையில் தப்லீஃக் செய்யலாம் என்று பெரும்பாலும் கூறி வந்தார்கள். பேராகோயாவிலும் இவர்கள் முன்னிலையில் இரண்டு பைஅத்துகள் நடைபெற்றன என்பதை மகிழ்ச்சியோடு கூறிவந்தார்கள்.

இவர்களிடம் அதிகம் சிக்கனத் தன்மையும் இருந்தது. ஒருபோதும் இவர்கள் செல்வத்திற்கு ஆசைப்படவில்லை. அதன் ஏக்கமும் இருந்ததில்லை. மாறாக, அல்லாஹ் இவர்களுக்கு வழுங்கியதிலேயே எப்போதும் நன்றி செலுத்தி வந்தார்கள். அதாவது, எந்தத் தேவையானாலும் அல்லாஹ் பூர்த்தி செய்து விடுவான் என்று அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கையும் தவக்குலும் இருந்தது.

எப்பொழுதும் ஏதாவது கஷ்டம் வந்தால், துஆ செய்யுங்கள் அல்லாஹ் சரியாக்கி விடுவான் என்று கூறுவார்கள். அல்லாஹ் சரியாக்கியும் வந்தான். இவர்களின் மகன் கூறுகிறார்கள்: முரப்பி என்கிற வகையில் உனது பொறுப்பை புரிந்து கொள். தூய முறையில் வேலை செய் என்று எனக்கு மீண்டும் மீண்டும் கூறி வந்தார்கள். இவர்களின் மனைவி கூறுகிறார்கள்:

நாங்கள் 39 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்தோம். நான் இவர்களிடம் எந்தக் குறையையும் காணவில்லை. காலத்தின் கலீஃபாவோடு அன்பு மற்றும் நன்றி உணர்வின் தொடர்பு இருந்தது. பிள்ளைகளுக்கும் இதற்கு வலியுறுத்தி வந்தார்கள். நேரான பாதையில் தாமும் செல்வார்கள். பிள்ளைகளையும் செலுத்தி வந்தார்கள். மனைவி கூறுகிறார்கள்: எங்கள் வாழ்க்கையின்போது, ஒருபோதும் யாரைப் பற்றியும் தவறாகக் கூறியதில்லை. பிறகு மனைவி வீட்டு உறவினர்களையும் கருத்தில் கொண்டு வந்தார்கள். என் தாயாருக்கு எப்பொழுது என் தேவை ஏற்பட்டாலும் என்னை மகிழ்ச்சியோடு அவர்களிடம் அனுப்பி வைத்து வந்தார்கள்.

பேராகோயாவின் முரப்பி அப்துன் நூர் பாதின் ஸாஹிப் கூறுகிறார்கள்: இவர்களுக்கு கனடாவில் பல்வேறு பொறுப்புகளில் தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்து வந்தது. ஆனால், இவர்களிடம் கர்வம் மற்றும் பெருமிதத்தை வெளிப்படுத்துவதற்கான எந்த அம்சமும் இருக்கவில்லை. இவர்களின் ஜமாஅத் தொண்டுகள் ஆர்வம் மிகுந்திருந்தது. எங்கு சென்றாலும் எப்பொழுதும் முழுமையான முறையில் ஒரு கடமையாகக் கருதி மிகவும் அன்போடு பணியை நிறைவேற்றி வந்தார்கள். இவர்கள் கூறுகிறார்கள்: பேராகோயோ ஜமாஅத்தின் இளைஞர்கள் மீது இவர்களின் இயல்பின் ஆழமான தாக்கம் இருந்தது. அவர்களுக்குப் பொறுமை, பரிவு மற்றும் விருந்தோம்பல் ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்தார்கள்.

ரஜாயினா ஜமாஅத்தின் சத்ர் ஹபீபுர் ரஹ்மான் ஸாஹிப் கூறுகிறார்கள்: ஜமாஅத்தின் மிகவும் தூயத் தொண்டராக இருந்தார்கள். புன்சிரிப்பு எப்பொழுதும் முகத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தது. நான் இவர்களை ஒருபோதும் கோபத்தில் கண்டதில்லை.

எப்போதும் தம் இறைவனின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற ஆர்வம் இவர்களிடம் இருந்தது. கிலாஃபத்துடன் அளவற்ற நேசம் இருந்தது. பேராகோயாவில் ஒரு புதிதாக பைஅத் செய்த இல்யாஸ் அல்வீர் ஸாஹிப் இருக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு இவர்களைக் கொஞ்ச காலமாகத்தான் தெரியும். ஆனால், இந்தக் கொஞ்ச காலத்தில் இவர்கள் இஸ்லாத்தின் வழியில் புதிதாக இருந்த, எனக்கும் என் தோழர்களுக்கும் ஒரு மிகப் பெரும் சொத்தை விட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

நாங்கள் இவர்களிடமிருந்து பொறுமையைக் கற்றோம். நாங்கள் எந்நேரமும் உதவியாளர்களாகவும் கருணை காட்டக் கூடியவர்களாகவும், நல்லவர்களாகவும் ஆவதைக் கற்றுக் கொண்டோம். அவர்கள் கூறுகிறார்கள்:

இவர்கள் யாருக்கும் எதையும் கற்றுக் கொடுப்பதற்குப் பேச வேண்டியது அவசியமில்லை. அமல் மூலமாக தொண்டாற்றுங்கள். அதன் மூலமாக மக்கள் கற்றும் கொள்கிறார்கள். போதுமான தப்லீஃகும் நடந்து விடுகிறது என்பதை எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

அல்லாஹ் மர்ஹூம் அவர்களுக்குப் பாவ மன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களின் பிள்ளைக்குப் பொறுமையையும் மனதைரியத்தையும் வழங்குவானாக! இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

இப்போது ரானா முஹம்மத் ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களின் குறிப்பு இருக்கிறது. இவர்கள் இயக்கத்தின் முரப்பியாக இருந்தார்கள். இவர்களும் கடந்த நாள்களில் மரணமடைந்து விட்டார்கள். இவர்கள் ரானா அதாவுல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். இவர்கள் ஏப்ரல் மாதத்தின் கடைசியில் மரணமடைந்தார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களுடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவர்களின் தந்தை வழிப்பாட்டனார் ரானா இலாஹூத்தீன் ஸாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. அவர்கள் 1931 இல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்தார்கள். பைஅத்திற்குப் பிறகு இவர்களுக்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது.

அந்த எதிர்ப்பின் காரணமாக மக்கள் முர்தத் ஆகிவிட்டார்கள். இவர்களின் உறவினர்களான மற்ற மக்கள் இருந்தார்கள். அவர்கள் முர்தத் ஆகிவிட்டாகள். ஆனால், இவர்கள் அஹ்மதிய்யத்தில் உறுதியாக இருந்தார்கள். மார்க்கத்தைத் தப்லீஃகும் செய்து வந்தார்கள். ரானா ஸஃபருல்லாஹ் ஸாஹிப் அவர்கள் 1987 இல் ஜாமிஆ தேர்ச்சி பெற்றார்கள். அதற்குப் பிறகு தொடர்ச்சியாக 36 ஆண்டுகள் வரை இவர்களுக்குத் தொண்டாற்றுவதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது.

இவர்களின் மார்க்கத் தொண்டின் அதிக நேரம் செயல் களத்தில் பல்வேறு பகுதிகளில் முரப்பி என்ற வடிவிலேயே கிடைத்தது.

ஸய்யித் நிஃமத்துல்லாஹ் ஸாஹிப் ஆஃப்கானீ முபல்லிஃக் ஆவார்கள். இன்றைய நாள்களில் கானாவில் இருந்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் ஆஃப்கானிஸ்தானில் இருந்து ஹிஜ்ரத் செய்து சென்ற பேஷாவரில் உள்ள, அச்சீபாயானில் இந்த முரப்பி ஸாஹிப் இருந்தார்கள். 1999 மற்றும் 2000 ஆவது ஆண்டாக இருக்கும். மிகவும் எளிமையான இயல்புடையவர். பணிவு மற்றும் ஏழ்மையான மனிதராக இருந்தார்கள். மிகவும் கடுமையாக உழைக்கக் கூடியவர். அன்பு செலுத்தக் கூடியவர் மற்றும் மனத் தூய்மை உடையவராக இருந்தார்கள்.

ஆஃப்கான் ஜமாஅத் மீது முரப்பி ஸாஹிப் அவர்களின் பேருதவி அதிகமாக இருக்கிறது. அவர்கள் கூறுகிறார்கள்: ஆஃப்கானிய முரப்பிகளாகிய எங்கள் மூவரையும் அல்லாஹ் இவர்களின்

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்...

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போருக்கான தயாரிப்புகள் மேலும் கண்ணியத்திற்குரிய ஸஹாபிகள் தமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த உத்வேகம் மிக்க நேசம் மற்றும் பத்ர் போர் சந்தர்ப்பத்தின் போது ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்கள் செய்த உருக்கமான துஆக்கள்**

**அல்லாஹ்வின் தூதரே! எதிரி முன்னால் இருக்கின்றான். இங்கிருந்து தப்பிச் செல்ல முடியுமா? முடியாதா? என்பது தெரியாது. எனவே ஷஹாதத்திற்கு முன்பு தங்களின் அருளுக்குரிய உடலை எனது உடல் தொடுவதை நான் விரும்பினேன் என்று கூறி இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தை விநோதமான வடிவில் ஸவாத் பின் கஸிய்யா (ரலி) அவர்கள் வெளிப்படுத்தினார்கள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போரின் போது சில மக்களை கொலை செய்வதிலிருந்து தடுத்தும் இருந்தார்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 2023-**ஜீன் 30 அதாவது ஹிஜ்ரீ ஷம்ஸி 1402 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் 30-**ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஸவாது பின் கஸிய்யா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த நேசத்தை விநோதமான முறையில் வெளிப்படுத்திய சம்பவம் கடந்த குத்பாவில் கூறப்பட்டது. அன்னாரைப் பற்றி கூடுதல் விளக்கம் இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் ஸவாது பின் கஸிய்யா (ரலி) அவர்கள் இந்தப் போரில் வெற்றி வாகை சூடிய கம்பீரத்துடன் திரும்பினார்கள். இணை வைப்பாளர்களில் ஒருவனான காலித் பின் ஹிஷ்ஷாமை சிறைபிடிக்கவும் செய்தார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பின்னர் இவர்களை கைபர் போருக்காக செல்வத்தை ஒன்று திரட்டும் செயலாராக நியமித்தார்கள்.

சிலரது பார்வையில் மேற்கூறப்பட்ட சம்பவம் ஹஸ்ரத் ஸவாது பின் கஸிய்யா (ரலி) அவர்கள் அல்லாமல் ஹஸ்ரத் ஸவாது பின் அம்ர் பின் (ரலி) அவர்களுடன் பொருத்திக் கூறப்பட்டுள்ளது. ஆனால், அது வேறு சம்பவம் என்றே தோன்றுகிறது. வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் பெரும்பாலும் இந்த சம்பவம் ஹஸ்ரத் ஸவாது பின் கஸிய்யா (ரலி) அவர்களின் பெயரிலேயே கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இந்த சம்பவம் குறித்து எடுத்துரைத்துள்ள விளக்கம் இவ்வாறு உள்ளது:

அச்சமயம் ஹிஜ்ரீ 2-ம் ஆண்டு ரமலான் மாதம் 17-ம் தேதி மற்றும் ஜுமுஆ நாளாக இருந்தது. கிறித்தவ ஆண்டின்படி மார்ச் 14,கி.பி 623-ம் ஆண்டாக இருந்தது. காலையில் எழுந்து அனைத்திற்கும் முதலாக தொழுகை நிறைவேற்றப்பட்டது. ஓரிறைவனை வணங்குபவர்கள் திறந்த மைதானத்தில் ஓரிறைவனுக்கு முன்னால் சிரம்பணிந்தார்கள்.

அதற்குப் பிறகு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஜிஹாது பற்றி ஒரு உரை நிகழ்த்தினார்கள். பிறகு, சற்று வெளிச்சம் வந்ததும், அன்னார் அம்பை வைத்து முஸ்லிம்களின் வரிசையை சரி செய்யத் துவங்கினார்கள். ஸவாது எனும் பெயரை உடைய ஒரு ஸஹாபி வரிசையிலிருந்து சற்று முன்னால் வந்து நின்று கொண்டிருந்தார். அன்னார் அம்பை வைத்து அவரைப் பின்னால் செல்லுமாறு கூறினார்கள். ஆனால், தற்செயலாக அன்னாரது அம்பில் இருந்த கட்டை அவருடைய நெஞ்சில் பட்டது. அவர் துணிச்சலான முறையில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்களை உண்மையுடனும், நீதியுடனும் அனுப்பியுள்ளான். ஆனால் தாங்களற் அநியாயமாக என்னை அம்பால் குத்தி விட்டீர்கள்! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நானோ இதற்குப் பழிவாங்கியே தீருவேன் என்று பணிவுடன் கூறினார். ஸஹாபிகள் வியப்பிற்குள்ளானார்கள். ஸவாதுக்கு என்ன ஆகிவிட்டது? என்று கவலையும், வியப்பும் அடைந்தார்கள்.

ஆனால், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சரி, ஸவாது நீரும் என்னை அம்பால் குத்திக் கொள்ளும் என்று மிகவும் பரிவுடன் கூறினார்கள். மேலும், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது நெஞ்சின் மீதிருந்த துணியை விலக்கினார்கள். ஹஸ்ரத் ஸவாது (ரலி) அவர்கள் அன்பின் மிகுதியால் முன்னால் வந்து அன்னாருடைய நெஞ்சில் முத்தமிட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புன்சிரித்தவாறு, ஸவாதே! இது உமக்கு ஏன் தோனிற்று? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ஸவாது (ரலி) அவர்கள் உருக்கமான குரலில் அல்லாஹ்வின் தூதல் (ஸல்) அவர்களே! எதிரி முன்னால் இருக்கின்றான். இங்கிருந்து தப்பிச் செல்ல முடிகிறதோ? இல்லையோ? என்று ஒன்றும் தெரியவில்லை. நான் ஷஹீதாவதற்கு முன் தங்களது அருளுக்குரிய உடலோடு என் உடலை உரசிக் கொள்ள நினைத்தேன் என்று பணிவுடன் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு அருகில் இதே போன்ற சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். பத்ர் யுத்தத்தில் அல்ல ; மாறாக, மரண நேரத்தில் நிகழ்ந்ததாக அன்னார் குறிப்பிட்டுள்ள சம்பவம் இத்துடன் ஒத்துப் போகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி)அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரண நேரம் நெருங்கியபோது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை ஒன்று திரட்டினார்கள். மேலும் கூறினார்கள்: பாருங்கள்! நானும் உங்களைப் போன்ற மனிதன் தான். நான் உங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமை சம்பந்தமாக எப்போதாவது, ஏதாவது பிழை ஏற்பட்டிருக்கலாம். ஒருவேளை நான் உங்களில் யாருக்காவது பாதிப்பை விளைவித்திருக்கலாம். நீங்கள் வாதிடும் வகையில் இறைவனுக்கு முன்னால் நான் செல்வதற்குப் பதிலாக, இப்போது நான் உங்களிடம் கூறுகின்றேன்; உங்களில் எவருக்காவது என்னால் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவர் இந்த உலகத்திலேயே என்னிடமிருந்து தமக்கு ஏற்பட்ட பாதிப்பை தீர்த்துக் கொள்ளலாம்.

ஸஹாபிகளுக்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதிருந்த நேசத்தைப் பார்க்கையில், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறிய இந்தச் சொற்களில் அவர்களின் இதயங்களில் எத்தனை கத்திகள் பாய்ந்திருக்கும்; அவர்களின் உள்ளங்களில் எவ்வளவு உருக்கம் ஏற்பட்டிருக்கும் என்பதை அனுமானித்துக் கொள்ள முடியும்.

ஆக, அவ்வாறே நிகழ்ந்தது. ஸஹாபிகளுக்கு உருக்கம் ஏற்பட்டுவிட்டது. அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. அவர்களால் பேசவே முடியவில்லை. ஆனால், ஒரு ஸஹாபி எழுந்து நின்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் யாருக்காவது சேதம் விளைவித்திருந்தால் அவர் அதற்காக என்னிடம் பழிதீர்த்துக் கொள்ளலாம் என்று தாங்கள் கூறியதனால் நான் தங்களிடம் ஒரு பழிதீர்த்துக் கொள்ள விரும்புகின்றேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆம், விரைவாக கூறுவீராக!; உமக்கு என்னால் என்ன சேதம் ஏற்பட்டது? என்று கேட்டார்கள். அதற்கு, அந்த ஸஹாபி அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களே! இன்ன போர் சந்தர்ப்பத்தில் தாங்கள் வரிசைகளை சரி செய்து கொண்டிருந்தீர்கள்.

அப்போது தங்களுக்கு ஒரு வரிசையைக் கடந்து முன்னால் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. தாங்கள் வரிசையைக் கிழித்துக் கொண்டு முன்னால் சென்றபோது, தங்களுடைய முழங்கை என் முதுகில் இடித்து விட்டது. இன்று நான் அதற்குப் பழிதீர்த்துக் கொள்ள விரும்புகின்றேன் என்று கூறினார்கள்.

ஸஹாபிகள் கூறுகிறார்கள்: அப்போது கோபத்தால் எங்களுடைய வாள்கள் உறைகளிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தன. எங்கள் கண்களிலிருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது. அந்த நேரத்தில் ஹஸ்ரத் ரஸுல்லாஹ் (ஸல்) அவர்கள் மட்டும் எங்களின் முன்னால் இல்லாமல் இருந்திருந்தால் நிச்சயமாக

நாங்கள் அவரைத் துண்டு துண்டாக்கியிருப்போம். ஆனால், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது முதுகை அவர் பக்கம் திருப்பி இதோ நீங்கள் பழிதீர்த்துக் கொள்ளுங்கள்; என்னையும் அதேபோன்று முழங்கையால் இடித்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அந்த ஸஹாபி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இப்போது முடியாது. தங்களது முழங்கை என் மீது இடித்தபோது நான் வெறும் முதுகோடு இருந்தேன். ஆனால், தங்களது முதுகில் ஆடை இருக்கின்றது என்று கூறினார். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், என் முதுகில் இருந்து ஆடையை விலக்குங்கள் என்று ஸஹாபிகளிடம் கூறினார்கள். ஸஹாபிகள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முதுகில் இருந்த ஆடையை விலக்கிய பிறகு, அந்த ஸஹாபி நடுங்கிய உதடுகளோடும், வழிந்த கண்ணீரோடும் முன்னால் வந்தார். மேலும், அவர் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வெறும் முதுகில் அன்புடன் ஒரு முத்தமிட்டார். மேலும் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த எளியவனான அடிமை (தங்களை) பழிவாங்குவதா! எந்த நேரத்தைப் பற்றி எண்ணிப் பார்த்தால் எங்களுக்கு மெய் சிலிரிக்குமோ அந்த நேரம் நெருங்கிவிட்டது போலும் என்பது தங்கள் மூலமாக தெரிய அந்த வந்த வேளையில், எல்லா அருட்களின் திரளாக இறைவன் ஆக்கியுள்ள அந்த அருளுக்குரிய தங்களின் உடலை என் உதடுகள் தொட்டுக் கொள்ளட்டும் என்று நான் விரும்பினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! முழங்கை இடிப்பது என்ன பெரிய விஷயம்! எங்களுடைய அனைத்தும் தங்களுக்காக அர்ப்பணம்! தங்களை முத்தமிட ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விட வேண்டும் என்று என் உள்ளம் இதை ஒரு சாக்குப்போக்காக ஆக்கிக் கொண்டது.

இந்த நபரை கொல்ல நினைத்துக் கொண்டிருந்த அந்த (ஏனைய) ஸஹாபிகள் அந்த நேரத்தில் அவர் கூறிய அந்த விஷயத்தைக் கேட்டு கோபத்தில் இருந்தவர்கள். இங்கோ அவர் உள்ளத்தில் வேறு விஷயமே இருக்கிறதே! என்பதைப் பார்த்தபோது அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களுக்கு ஏன் இந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை! நாங்கள் எங்கள் அன்பிற்குரிய எஜமானரை முத்தமிட்டிருக்கலாமே! என்று பின்னர் எங்களில் ஒவ்வொருவருக்கும் தம் மீதே கோபம் வர ஆரம்பித்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இவர்கள் தான் நம்மை வழிநடத்துபவரும் நமது வழிகாட்டியும் ஆவார்கள். அதாவது, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள். அன்னார் (ஸல்) தமது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் நமக்கு எத்தகைய முன்மாதிரியைக் காட்டியுயள்ளார்கள் என்றால், அதற்கான உதாரணம் வேறு எந்த நபியிடமும் கிடைக்க முடியாது. பத்ர் யுத்தத்தில் ஸஹாபிகளின் ஷிஆர் அதாவது அடையாளம், அல்லது முழக்கம் என்னவாக இருந்தது என்பது பற்றி வருகிறது. ஹஸ்ரத் உர்வா பின் ஸுபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: போர் நாளன்று யா பனீ அப்தீர் ரஹ்மான் என்பது முஹாஜிர்களின் முழக்கமாக இருந்தது. யா பனீ அப்தில்லாஹ் என்பது கஸ்ரஜ் கோத்திரத்தின் முழக்கமாக இருந்தது. யா பனீ உபைதில்லாஹ் என்பது அவ்ஸ் கோத்திரத்தின் முழக்கமாக இருந்தது. ஹஸ்ரத் ரஸுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம்முடைய குதிரை வீரர்களுக்கு கைலுல்லாஹ் என்று பெயரிட்டிருந்தார்கள்.

இந்த ஓர் அறிவிப்பும் உள்ளது. யா மன்ஸுரு அமித் அதாவது உதவி வழங்கப்பட்டவரே கொன்று விடுவீராக! என்பது எல்லாரின் முழக்கமாக இருந்தது. ஓர் அறிவிப்பில் வருகிறது. பத்ர் யுத்தத்தில் மதீனாவில் அன்ஸார் ஸஹாபிகளின் ஷிஆர் அல்லது நான் கூறியது போன்று அடையாளம் அல்லது முழக்கம் அஹது என்பதாக இருந்தது. இரவின் இருளில் அல்லது மிகவும் மும்முரமான போரில் இந்த முழக்கத்தைக் கொண்டு இவர்கள் அன்ஸார் ஸஹாபிகள் என்று அடையாளம் காணப்பட வேண்டும் என்பதற்காக அது நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதேபோன்று முஹாஜிர்களான முஸ்லிம்களின் அடையாளம் அல்லது முழக்கம் யா பனீ அப்தீர் ரஹ்மான் என்பதாக இருந்தது.

ஹஸ்ரத் ரஸுல்லாஹ் (ஸல்) அவர்கள் சம்பந்தமாக வழங்கிய வழிகாட்டல்கள் குறித்து மேற்கண்ட விளக்கம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரிசைகளை நேராக்கி விட்ட பிறகு ஸஹாபிகளிடம் கூறினார்கள்: நான் உங்களுக்குக் கட்டளையிடாத வரை நீங்கள் தாக்குதல் தொடுக்கக் கூடாது. எதிரி உங்களுக்கு அருகில் வந்து விட்டால், நீங்கள் அம்பு எய்து அவர்களைப் பின்னுக்குத் தள்ளி விடுங்கள். ஏனெனில், தூரத்திலிருந்து அம்பு எய்வது பெரும்பாலான வேளையில் பயனற்றதாகவே இருக்கும். அம்புகள் வீணாகிக் கொண்டே இருக்கும். அதேபோன்று வாள்களையும் எதிரி முற்றிலும் அருகில் வந்து விடாத வரை ஏந்தக் கூடாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆற்றிய ஓர் உரையைப் பற்றிய குறிப்பு வருகிறது. ஹஸ்ரத் ரஸுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு முன்னால் உரை நிகழ்த்தினார்கள். அதில் ஜிஹாது பற்றி எழுச்சியூட்டினார்கள். பொறுமை காக்குமாறு வலியுறுத்தினார்கள். மேலும் கூறினார்கள்: துன்ப வேளையில் பொறுமை காப்பதால் அல்லாஹ் துன்பங்களை அகற்றுகின்றான். துயரங்களில் இருந்து ஈடேற்றம் அளிக்கின்றான்.

ஹஸ்ரத் ரஸுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிகழ்த்திய இந்த உரையைப் பற்றிய விவரம் இவ்வாறு வந்துள்ளது: ஹஸ்ரத் ரஸுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ் ஊக்குவித்த விஷயத்தில் நான் உங்களை ஊக்குவிக்கின்றேன். மேலும், அவன் உங்களைத் தடுத்துள்ள அந்த விஷயத்தை விட்டும் நான் உங்களைத் தடுக்கின்றேன்.

கண்ணியத்திற்குரியவனும், மேலானவனும் ஆன அல்லாஹ் உங்களுக்கு உண்மையை மேற்கொள்வதற்கான கட்டளை பிறப்பிக்கின்றான். அவன் உண்மையை விரும்புகின்றான். அவன் நற்செயல் ஆற்றுபவர்களுக்குத் தன்னிடம் இருக்கும் உயர்ந்த தரங்களை வழங்குகின்றான். அவர்கள் அதன் மூலமாக நினைவு கூரப்படுகின்றார்கள். அதன் மூலமாக அவர்கள் நன்மையில் ஒருவரை ஒருவர் முந்த விரும்புகின்றார்கள். இன்று நீங்கள் உண்மையின் படிகளில் ஒரு படியில் நிற்கின்றீர்கள். அதில் அல்லாஹ் தான் திருப்தி அடைவதற்காக செய்யப்படும் செயலை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றான்.

கடுமைகாட்டும் இடத்தில் பொறுமை காட்டுவது எப்படிப்பட்டது என்றால் அதன் மூலம் அல்லாஹ் துயரத்தை அகற்றுகின்றான். இன்னலில் இருந்து ஈடேற்றம் அளிக்கின்றான். மறுமையில் அதன் மூலமாக ஈடேற்றம் அடைவீர்கள்; அதன் மூலமாக ஈடேற்றம் அடைவீர்கள். அதாவது, பொறுமையைக் காட்டுவதன் மூலமாக.

உங்கள் மத்தியில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) இருக்கின்றார். அவர் உங்களை அச்சுறுத்துகின்றார். மேலும் அல்லாஹ் உங்கள் விவகாரத்தில் தன்னுடைய கோபத்திற்கு காரணமாக ஆகின்ற ஏதாவது ஒரு விஷயத்தை உங்களிடம் காண்பதை விட்டும் இன்று நீங்கள் அல்லாஹ்விடம் வெட்கப்படுங்கள் என்று உங்களுக்குக் கட்டளை இடுகிறார். அல்லாஹ் கூறுகின்றான்:

لَمَقْتُ اللّٰهِ اَكْبَرُ مِنْ مَّقْتِكُمْ اَنْفُسَكُمْ

அல்லாஹ்வின் கோபம் நீங்கள் ஒருவர் மற்றவருடன் கொள்ளும் கோபத்தைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. அவன் உங்களுக்கு மறை நூலில் கட்டளையிட்டுள்ள அந்த விஷயத்தைப் பாருங்கள். அவன் உங்களுக்குத் தன்னுடைய அடையாளங்களைக் காட்டினான். இழிவுக்குப் பிறகு உங்களுக்கு கண்ணியம் வழங்கியுள்ளான். அல்லாஹ் உங்கள் மீது திருப்தி கொள்ளும் பொருட்டு அல்லாஹ்வின் ஆடையை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.

இந்த இடத்தில் நீங்கள் உங்கள் இறைவனின் சோதனையில் முழுமையாக வென்று காட்டுங்கள். அப்போது நீங்கள் அவன் உங்களிடம் வாக்குறுதியளித்துள்ள அவனுடைய கருணைக்கும், பாவ மன்னிப்பிற்கும் உரியவர்களாக ஆகிவிடுவீர்கள். அவனுடைய வாக்குறுதி உண்மை ஆகும். அவனுடைய கூற்று உண்மை ஆகும். அவனுடைய தண்டனை கடுமையானதாகும்.

நானும் நீங்களும் உயிருள்ளவனும் நிலைத்திருப்பவனுமான அல்லாஹ்வுடன் இருக்கின்றோம். நாம் அவனிடம் நம்முடைய வெற்றிக்காக துஆ செய்கின்றோம். அவனுடைய ஆடையைப் பற்றிப் பிடிக்கின்றோம். அவனையே நம்பி இருக்கின்றோம். அவன் பக்கமே திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது. அல்லாஹ் எங்களையும் முஸ்லிம்களையும் மன்னித்தருள்வாயாக!

இது அதன் விளக்கமாக இருந்தது.

**(தொடர்ச்சி அடுத்த இதழில்.....)**

தமிழாக்கம்:
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * *

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 10 August 2023 Issue No. 32

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## மல்ஃபூஸாத் (1ம் பக்கம் தொடர்ச்சி......)

நபித்துவத்தின் உச்சமாக இருந்த அந்த வெற்றி அன்னாரது வாழ்க்கையில் கிடைக்கவில்லை. மேலும் அந்த புனித பூமியையும் வாக்களிக்கப்பட்ட நிலத்தையும் அன்னார்(அலை) தமது கண்களால் காண முடியவில்லை. இன்னும் கூறப்போனால், வழிப்பாதையிலேயே மரணித்து விட்டார்கள். ஒரு நிராகரிப்பாளர் எவ்வாறு ஒப்புக் கொள்வார்? மேலும் வழிப்பாதையிலேயே மரணித்தது மற்றும் வாக்களிக்கப்பட்ட பூமியை அடைய முடியாமல் போனது ஆகியவற்றிற்கான காரணத்தை ஈமான் அற்ற ஒரு மனிதன் எப்படி செவிமடுப்பார்? அன்னார் இறைவனால் அனுப்பப்பட்டவராக இருந்திருந்தால் பின்னர் அந்த வாக்குறுதி அவரது வாழ்க்கையிலேயே ஏன் நிறைவேறவில்லை? என்றே அவர் கூறுவார். உண்மையான விஷயம் என்னவென்றால், அனைத்து நபிமார்களின் நபித்துவத்தின் (குறைபாடுகளின் மீதான) திரையிடுதல் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலமாக நிகழ்ந்துள்ளது.

(மல்ஃபூஸாத், தொகுதி 4,பக்கம் 114, காதியான் பதிப்பு - 2003ம் ஆண்டு )

## தஃப்ஸீரே கபீர் (1ம் பக்கம் தொடர்ச்சி......)

துஆ செய்தார்கள். அப்போது இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் திரையை உருவாக்கி விட்டான்; மேலும், அதன் காரணமாக அவளால் அன்னாரை காண முடியவில்லை போன்றவை வெறும் கட்டுக் கதைகள் ஆகும். முழு உலகிற்கும் அஞ்சாத இறைவனின் அந்தத் தூதர் (ஸல்) ஒரு பலவீனமான பெண்ணிடம் அல்லாஹ்வை மறைக்க நேரிடும் அளவிற்கு அச்சமடைவது எவ்வாறு சாத்தியம் ஆகும்? இந்த அறிவிற்கு புறம்பான விஷயத்தை எந்த ஓர் அறிவுடையவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார். இந்த அறிவிப்பை முன் வைக்கக் கூடியவர்கள் இறைவன் அந்தத் திரையை மஸ்தூர் என்று குறிப்பிட்டுள்ளான் என்பதை கூட சிந்திப்பதில்லை. அதாவது அந்தத் திரையை காண முடியாது. ஆயினும், இந்த மக்கள் அந்த திரைக்கு வெளிப்படையான திரை என்று பொருள் கொடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மஸ்தூர் (மறைக்கப்பட்டவர்) ஆக ஆக்கிவிடுகின்றனர்.

(2) இந்த வாக்கியத்திற்கு இரண்டாவது பொருள் இவ்வாறாக இருக்கக் கூடும்: அந்தத் திரையும் அதற்கு அடுத்து இருக்கும் மற்றொரு திரைக்குப் பின்னால் இருக்கின்றது. அதாவது, உமக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு திரை மட்டுமே இருப்பதில்லை. மாறாக, பல திரைகள் இருக்கின்றன. ஒன்று சமுதாய பெருமை, மற்றொன்று செல்வம், மற்றொன்று ஒழுக்கம் போன்றவை ஆகும். அதாவது, இவரை ஏற்றுக் கொள்வதால் சமுதாயத்தை விட்டு விலக நேரிடும் என்ற இந்த எண்ணத்தால் சிலநேரம் மக்கள் ஈமான் கொள்வதில்லை. சிலநேரம், செல்வத்தை இழக்க நேரிடும் என்ற எண்ணம் இடையில் வந்து விடுகின்றது. சில நேரம், பல வகையான தீய ஒழுக்கங்களை தமது நடைமுறையாக ஆக்கிக் கொண்டவர்களுக்கு அந்த தீய ஒழுக்கங்களை கைவிட நேரிடும். அவற்றை கைவிட நேரிடுமே என்ற விஷயமும் வழிப்பாதையை தடுத்து நிறுத்தி விடுகிறது. எனவே இந்த வசனத்தில் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது, எதுவரை இந்த மக்கள் இந்த திரைகளை அகற்றமாட்டார்களோ அதுவரை இவர்கள் உம்மை வந்தடைய முடியாது. ஆனால், துன்பம் என்னவென்றால், அந்தத் திரைகள் எவ்வாறு விழுந்துள்ளன என்றால், அவர்களுக்கு அவை தென்படுவதில்லை. அவர்களின் பார்வையிலிருந்து அவை மறைந்திருக்கின்றன. திருக்குர்ஆனே மிகத் தீய விஷயம் ஆகும் என்று அவர்கள் தங்களது எண்ணத்தில் கருதுகின்றனர். அது நல்ல விஷயமாக இருந்திருந்தால் உடனடியாகவே நமது உள்ளங்களில் அதன் நல்ல தாக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

ஆக, அவர்களின் உள்ளங்களில் எப்படிப்பட்ட துரு பிடித்துள்ளது என்றால், அவர்களுக்கு நல்ல பொருள் தீயதாக தோன்றுகின்றது. மேலும் தீய விஷயம் நல்ல விஷயமாக தென்படுகின்றது. எனவே ஈமான் கொள்வது கடினமாக இருந்து கொண்டிருக்கின்றது. وَّ جَعَلۡنَا عَلٰی قُلُوۡبِہِمۡ اَکِنَّۃً

என்ற அடுத்த வசனம் இந்த அர்த்தங்களை உண்மைப்படுத்துகின்றது. அதாவது, அவர்களின் உள்ளங்களில் ஒரு திரை மட்டும் இல்லை; மாறாக, பல திரைகள் உள்ளன.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 344, காதியான் பதிப்பு - 2010)

## குத்பா பேருரை.... (9ம் பக்கம் தொடர்ச்சி.........)

காரணமாகவே முரப்பி ஆக்கிவிட்டான். ஏழைகள் மீது அதிகம் அனுதாபம் காட்டக் கூடியவராக இருந்தார்கள். யாருக்கும் தெரியாமல் ஏழைகளுக்கு உதவி செய்து வந்தார்கள். இவர்களின் மனைவி கூறுகிறார்கள்:

மரண செய்தியைக் கேட்டு எப்படிப்பட்ட பல மக்கள் ஆண்களும் பெண்களும் இரங்கல் தெரிவிப்பதற்காக வீட்டுக்கு வந்திருந்தார்கள் என்றால் அவர்களை எங்களில் யாருக்குமே தெரியாது. அந்த மக்கள் இந்தக் காரணத்தாலும் கவலை அடைந்திருந்தார்கள். அதாவது, முரப்பி ஸாஹிப் எங்களுக்கு செலவை நிர்ணயித்திருந்தார்கள். தம் உறவினர்கள் மற்றும் வசதி படைத்த மக்களிடமிருந்து வாங்கி வாங்கி இவர்கள் ஏழைகளுக்கு உதவி செய்து வந்தார்கள் இவர்களின் மரணத்திற்குப் பிறகு எங்கள் நிலை என்ன ஆகும் என்று கவலைப்பட்டார்கள்.

இவர்கள் மருமகன் இயக்கத்தின் முரப்பி ஆவார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நான் ரானா முஹம்மது ஸஃப்ருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களைப் போன்ற தன்னலமற்ற மக்களை மிகக் குறைவாகவே பார்த்திருக்கின்றேன். அவர்கள் கூறுகிறார்கள்: நான் எந்தவிதமான தான் என்ற குணத்தை மற்றும் அகந்தையை அவர்களிடம் கண்டதில்லை. மன்னிப்பதில் முந்திக் கொள்ளக் கூடியவராக இருந்தார்கள். மற்றவர் தவறு செய்திருந்தாலும் கூட மன்னிப்பு கேட்பதில் முந்திக் கொள்வார்கள்.

மிகவும் அன்பு செலுத்தக் கூடியவராகவும், எந்நேரமும் பிறருக்கு உதவக் கூடியவராகவும் இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் தாயார் மற்றும் துணைவியார் மட்டுமின்றி மூன்று மகள்கள் இருக்கிறார்கள். அல்லாஹ் மர்ஹூம் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக! பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களின் சந்ததிகளுக்கும் இவர்கள் செய்த நன்மைகளைத் தொடர நற்பேறு வழங்குவானாக!

தமிழாக்கம்:

மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

**National Watch Company**
Sales & Service




B. Mohamed Adil
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad